# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor

SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் சித்திரை–வைகாசி மாதம் / ஏப்ரல்–மே 04/2024 / APRIL–MAY 04/2024





# கோல குபு பாரு தேர்தலில் வாக்காளர்கள் விவேகத்துடன் முடிவெடுப்பர்–மந்திரி புசார் நம்பிக்கை

**செலாயாங்-**

கோல குபு பாரு தொகுதியில் கடந்த மூன்று தேர்தல்களிலும் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி வெற்றி பெற்றிருந்தாலும் விரைவில் நடைபெறவிருக்கும் அத்தொகுதி இடைத்தேர்தலை சிலாங்கூர் பக்காத்தான் ஹராப்பான் (ஹராப்பான்) இலகுவாக எடுத்துக் கொள்ளாது.

**வரும் இடைத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான அரசியல் ஆயுதங்கள் இல்லாத நிலையில், எதிர்க்கட்சியினர் கூட்டரசு அளவில் உள்ள பிச்சனைகளை மிகைபடுத்துவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாக மாநில ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.**

கடந்த 2013 முதல் மாநில அரசின் பங்களிப்பை பெரும்பான்மையான வாக்காளர்களால் மதிப்பிட முடியும் என்று நான் நம்புகிறேன். தொகுதியில் நான் எதிர்பார்ப்பது என்னவென்றால், சமூகத்திற்குத் திரும்ப வழங்கப்பட்ட நன்மைகள் உட்பட ஆற்றிய சேவைகள் சரியாக மதிப்பீடு செய்யப் படுகின்றனவா என்பதாகும் என அவர் குறிப்பிட்டார்.

நான் இவ்வாறு சொல்வது மாநிலப் பிரச்சினைகளைப் பற்றியது மட்டுமல்ல. நிச்சயமாக கூட்டரசுப் பிரச்சனைகளும் கூட. மாநில அரசாங்கத்தை தாக்குவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு வலுவான விஷயங்கள் இல்லை என்பதால் பொருத்தமற்றதாக இருக்கும் கூட்டரசு விஷயங்களைப் அவர்கள் பயன்படுத்துவார்கள் என்றும் நான் எதிர்பார்க்கிறேன் என்றார் அவர்.

இருப்பினும், மாநில சட்டசபையில் கவனம் செலுத்த வேண்டும். எங்களுடன் இணைந்து பணியாற்றக் கூடிய மற்றும் கூட்டரசு உறவுகளை மேம்படுத்தும் வகையில் செயல்படும் உறுப்பினர்களை நாங்கள் விரும்புகிறோம் என்று சொன்னார்.

சிலாங்கூர் மந்திரி புசார் கழகத்தின் (எம்.பி.ஐ.) ஏற்பாட்டில் சுங்கை துவா குடியிருப்பாளர்களுக்கு நோன்புப் பெருநாள் உதவி நிதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலில் யாரைத் தேர்ந்தெடுப்பது என முடிவெடுக்கும் உரிமையை வாக்காளர்களின் விவேகத்திற்கு விட்டு விடுவதாகக் கூறிய அமிருடின், சரியான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களின் ஆற்றலை குறைத்து மதிப்பிட மாட்டோம் என்றார்.

கோல குபு பாரு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 11ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஏப்ரல் 27ஆம் தேதியும் தொடக்கக் கட்ட வாக்களிப்பு மே 7ஆம் தேதியும் நடைபெறும் என தேர்தல் ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் கானி சலே தெரிவித்தார். கடந்த 2022 இல் நடைபெற்ற நாட்டின் 15வது பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் ஏழாவது இடைத் தேர்தல் தேர்தல் இதுவாகும்.

## முதலீட்டு வளர்ச்சியில் சிலாங்கூர் முதலிடம் - வெ.23,170 கோடி

**கோல சிலாங்கூர்-**

கடந்த 2019 மற்றும் 2023 க்கும் இடையில் மலேசியாவில் அதிகமாக அதாவது மொத்தம் 23,170 கோடி வெள்ளி மதிப்புள்ள முதலீடுகளை சிலாங்கூர் ஈர்த்துள்ளதை முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சின் சமீபத்திய தரவுகள் காட்டுகின்றன.

அக்காலகட்டத்தில் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் 128,550 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டில் 18 விழுக்காடு சிலாங்கூரில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஜஃப்ருல் தெங்கு அப்துல் அஜிஸ் கூறினார்.

சிலாங்கூருக்கு அடுத்து பினாங்கு (22,150 கோடி வெள்ளி அல்லது 17.2 சதவீதம்) மற்றும் ஜோகூர் (16,240 கோடி வெள்ளி அல்லது 12.6 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2019 முதல் 2023 வரை மலேசியாவில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து முதலீடுகளிலும் கிட்டத்தட்ட பாதி (47.9 விழுக்காடு ) இந்த மூன்று மாநிலங்களை உள்ளடக்கியுள்ளன என்று அவர் சொன்னார்.

கடந்த 2013 முதல் 2023 வரை மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாக முதலீட்டு மதிப்புகள் மற்றும் வருமானம் குறித்து பாயா பெசார் தொகுதி உறுப்பினர் டத்தோ முகமது சஹார் அப்துல்லா எழுப்பிய கேள்விக்கு முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழிலியல் அமைச்சர் தெங்கு ஸப்ருள் அப்துல் அஜிஸ் கடந்த மார்ச் 27ஆம் தேதி வழங்கிய பதிலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரை, கோலாலம்பூர் 15, 980 கோடி வெள்ளி முதலீட்டையும் அதனைத் தொடர்ந்து கெடா 12,990 கோடி வெள்ளி முதலீட்டையும் சரவாக் 10,480 கோடி வெள்ளி முதலீட்டையும் பெற்றுள்ளன.


பக்கம் 3




5 தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடு


பக்கம் 4




பெண் தொழில்முனைவோருக்கு வெ.50,000 வரை பிரத்தியேகக் கடனுதவி


பக்கம் 6




ஆயிரக்கணக்கான பி40 தரப்பினர் பலனடைந்தனர்

## அரசு ஊழியர்களுக்கும்
# சம்பள உயர்வு

**ஷா ஆலம்-**

மத்திய அரசாங்கம் அமல் படுத்தியதைப் போல் சிலாங்கூர் அரசும் மாநிலத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் 13 விழுக்காட்டு சம்பள உயர்வை அமல்படுத்தும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த சம்பள உயர்வைத் தொடர்ந்து தற்போது உள்ள நிதி நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மத்திய அரசின் சம்பள உயர்வை அது பரிசீலனைக்கு உட்படுத்தும் என்று அவர் சொன்னார்.

சம்பள உயர்வு (மாநில அரசு ஊழியர்களுக்கு) நிச்சயம் அமல்படுத்தப்படும். பிரதமர் அறிவித்தது போல் அந்த சம்பள உயர்வு குறைந்த பட்சம் 13 விழுக்காட்டிலிருந்து தொடங்கும். இதன் தொடர்பான விரிவான விபரங்களை வரும் டிசம்பர் மாதம் அறிவிப்பேன் என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டரசு அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடப்பட்ட உடன் நாங்கள் சம்பள முறையை மறு ஆய்வு செய்வோம். இதுவரை சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை என்று அவர் சொன்னார்.

நாடு முழுவதும் மக்களின் வருமானம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் பிரதமர் அறிவித்த அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வை தனியார் துறையினரும் வரவேற்க வேண்டும் என அமிருடின் கூறினார்.

இதன் மூலம் இந்த பிராந்தியத்தில் உயர் வருமானம் கொண்ட நாடாக மலேசியாவை மாற்ற முடியும். உலகில், குறிப்பாக வளர்ந்த நாடுகள் மத்தியில் நிலவும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பையும் அதன் வழி சமாளிக்க இயலும் என்றார் அவர்.

அரசு ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் 13 விழுக்காடு சம்பள உயர்வு வழங்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த மே 1ஆம் தேதி அறிவித்தார். 1,000 கோடி வெள்ளிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டை உள்ளடக்கிய இந்த சம்பள உயர்வு வரும் டிசம்பர் மாதம் அமலுக்கு வரும் என்றும் அவர் சொன்னார்.




# 26 ஆண்டுக்காலப் போராட்டத்திற்கு நல்ல தீர்வு

**பெஸ்தாரி ஜெயா-**

பண்டார் பெஸ்தாரி ஜெயாவுக்கு அருகிலுள்ள மேரி, மிஞ்ஞாக், சுங்கை திங்கி, நைகல் காடனர், புக்கிட் தாகார் ஆகிய 5 தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைத்து விட்டது.

இதில் எந்த தரப்பும் அரசியல் இலாபம் தேடக் கூடாது என்று சிலாங்கூர் மாநில அரசு ஆட்சிக் குழு உறுப்பினர் துவான் பாப்பா ராய்டு கேட்டுக் கொண்டார்.

26 ஆண்டுகால இப்பிரச்சனை தற்போது மத்திய அரசும் மாநில அரசும் ஒன்று என்பதால் தீர்வு கிடைத்துள்ளது. இப்பிரச்சனை கடந்த பல ஆண்டுகளாக நீடித்து வந்தது. இதற்கு முன்னர் பெர்ஜாயா நிறுவனம் 20 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து விட்டது. தொழிலாளர்கள் சொந்த வீடு இலவசமாக வேண்டும் என்று போராடி வந்தனர்.

தற்போது சிலாங்கூர் மாநில அரசு ரி.ம. 35 மில்லியனும் மடாணி அரசு ரி.ம. 40 மில்லியனும் ஒதுக்கீடு செய்து தீர்வு கண்டுள்ளது. ஆக மொத்தம் ரி.ம. 75 மில்லியன் செலவில் 245 தொழிலாளர்களுக்கு இலவசமாக தரை வீடுகள் கட்டித் தரப் படும் என்று மாண்புமிகு பாப்பாராய்டு தெரிவித்தார்.

பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி, பெர்ஜாயா நிறுவனத்திற்கும் பாப்பா ராய்டு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

245 தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடு கனவு நிறைவேறியுள்ளது. இத்துடன் இப்பிரச்னை முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த 5 தோட்டங்களில் உள்ள கடை உரிமையாளர்களுக்கு இந்த திட்டத்தில் கடைகள் வழங்கப்படுமா என்று சிலாங்கூர்கினி கேட்ட போது " அது குறித்து இந்த வீடமைப்பு திட்டம் வரையும் போது பேசப் படும்" என்று அவர் தெரிவித்தார்.

இந்த 5 தோட்டங்களில் கடந்த 100 ஆண்டுகளாக இருந்து வரும் ஆலயங்கள் மற்றும் தமிழ்ப் பள்ளிகள் நிலைமை குறித்து சிலாங்கூர் கினி கேட்ட போது " ஆலயங்கள் மற்றும் தமிழ்ப் பள்ளிகள் தற்போது இருக்கும் இடத்தில் அப்படியே நிலை நிறுத்தப் படும் " என்று பாப்பாராய்டு தெரிவித்தார்.




# 2028 ஆம் ஆண்டுக்குள் சிலாங்கூர் ஜிடிபி 30 விழுக்காட்டை வழங்க உதவும்

**கோலாலம்பூர்-**

புக்கிட் பெருந்தோங், ரவாங்கில் செமிகொண்டக்டர் தொழில் மையத்தை நிர்மாணிப்பதானது, 2028 ஆம் ஆண்டுக்குள் மாநிலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 30 விழுக்காட்டை வழங்க உதவும்.

பசுமை ஆற்றல் கருப்பொருள் கொண்ட தொழில்துறை பகுதியின் மேம்பாடு, கூடிய விரைவில் செயல்படுத்தப்படும் என்று எம்பிஐ தலைமை நிர்வாக அதிகாரி கூறினார்.

"இது மலேசியாவின் ஒருங்கிணைந்த சுற்று (IC) வடிவமைப்பு பூங்கா மற்றும் பூச்சோங்கில் செமிகண்டக்டர் கட்டுமானம் தொடர்பான பிரதமரின் அறிவிப்பின் தொடர்ச்சியாகும்.

"பூச்சோங்கில் செமிகொண்டக்டர் ஆராய்ச்சி மையம், புக்கிட் பெருந்தோங்கில் ஒரு தொழில்துறை மையம் ஆகியவை ஒரு இரட்டை தொழில் புரட்சி திட்டமாக இருக்கும். இந்த வளர்ச்சி உள்ளூர் சமூகத்திற்குப் பொருளாதார பலன்களை வழங்கும்" என்று சைபொல்யாசன் மாட் யூசோப் கூறினார்.

எம்பிஐ திறந்த இல்ல உபசரிப்பில் நேற்று ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மார்ச் மாதம், வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட நான்கு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிலாங்கூர் கையெழுத்திட்டது. அவை "ARM Ltd", "Shenzhen Semiconductor Industry Association (China)", "Phison Malaysia" மற்றும் "SkyeChip" ஆராய்ச்சி ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

ஜூன் முதல் சிலாங்கூர் டிஜிட்டல் பொருளாதார தகவல் தொழில்நுட்பக் கழகத்தால் இயக்கப்படும் இந்த மையம் RM1 பில்லியன் வரை பொருளாதார வருவாயை உருவாக்கும் திறன் கொண்டது.

இது தொழில் வாய்ப்புகளையும் திறக்கும், குறிப்பாக பொறியியல் துறையில் RM5,000 முதல் RM7,000 வரை மாத சம்பளத்துடன் ஆகும்.

## வர்த்தக விரிவாக்கத்திற்கு
# ஹிஜ்ரா கடனுதவி

**ஷா ஆலம்-**

இம் மாநிலத்தில் உள்ள தொழில் முனைவோர் தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கு நிதியுதவி தேவைப்பட்டால், ஐ-பிஸ்னஸ் நிதித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

வர்த்தக உபகரணங்கள் வாங்குவதற்கும் வணிக வளாகங்களை புதுப்பிப்பதற்கும் தொழில் முனைவோருக்கு 50,000 வெள்ளி வரையிலான கடன் உதவி வழங்கப்படுவதாக யாயாசான் ஹிஜ்ரா அறவாரியம் (ஹிஜ்ரா) தெரிவித்தது.

"ஐ-பிசினஸ் ஃபைனான்சிங் திட்டத்தில் 50,000 வெள்ளி வரை கடனுதவி பெற வாய்ப்பு. ஆர்வமுள்ளோர் https://mikrokredit.selangor.gov.my எனும் அகப்பக்கம் வழி விண்ணப்பிக்கலாம் என்று அது தனது முகநூல் பதிவில் கூறியது.

ஐ-பிஸ்னஸ் திட்டத்துடன் கூடுதலாக, ஐ-பெர்மூசிம் திட்டம், நியாகா டாருல் எஹ்சான் (நாடி) திட்டம், கோ டிஜிட்டல் திட்டம் மற்றும் ஜீரோ டு ஹீரோ திட்டம் ஆகிய கடனுதவித் திட்டங்களையும் ஹிஜ்ரா அறிமுகப் படுத்தியுள்ளது.

கடந்த 2015 முதல் மொத்தம் 79 கோடியே 70 லட்சம் வெள்ளி 59,508 ஹிஜ்ரா உறுப்பினர்களுக்கு வர்த்தகக் கடனாக வழங்கப் பட்டுள்ளதாக ஹிஜ்ரா சிலாங்கூர் தலைமை நிர்வாக அதிகாரி டத்தோ மரியா ஹம்சா கடந்த மார்ச் 20ஆம் தேதி கூறியிருந்தார்.



# இந்திய பெண் முனைவோருக்கு 5 கோடி ஒதுக்கீடு

**பண்டார் ஸ்ரீ டாமன்சாரா-**

இந்திய பெண் தொழில் முனைவோரின் உயர்வுக்கும், உருமாற்றத்திற்கு ஒளிமயமான எதிர் காலத்திற்கும் வித்திடும் வகையில் அமானா இக்தியார் மலேசியா நிதியகத்தின் மூலம், 'பெண்" எனும் புதுமை திட்டத்தின் வழி, மேலும் 5 கோடி ரிங்கிட் கூடுதல் நிதியை தொழில் முனைவோர் மேம்பாடு கூட்டுறவு துறை துணையமைச்சர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் அறிவித்தார்.

இந்த கூடுதல் நிதியைத் தொடர்ந்து, அமானா இக்தியார் மலேசியா (ஏ.ஐ.எம்) நிதியகத்தில் இந்திய பெண் தொழில் முனைவோருக்கு மட்டும் தற்போது 7 கோடியே 14 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு உள்ளதாகவும், ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் தொடங்கி 2 கோடியே 10 லட்சம் ரிங்கிட் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டதாகவும் சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் தெரிவித்தார்.

"இக்கூடுதல் நிதியானது மலேசியா மடாணி கொள்கைக்கு ஏற்ப, 'பெண்' (வளப்பம், ஆளுமை, புதிய வளமை) எனும் புதிய திட்டத்தின் வழி வியாபாரக் கடனுதவியாக பகிர்ந்தளிக்கப்படும். இதன் வழி, இந்திய பெண் தொழில்முனைவோரை அடுத்த கட்ட வளர்ச்சிப் பாதைக்கு முன்னேற்ற முடியும். அவர்களின் சுய முன்னேற்றத்திற்கு வழிகோலும் இன்னொரு புதுமை முயற்சிதான் இது" என டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

ஏ.ஐ.எம்.-இன் உள் நிதியைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த 5 கோடி ரிங்கிட் கூடுதல் நிதி மூலம் கிட்டத்தட்ட 7,100 புதிய இந்திய பெண் தொழில் முனைவோரும், ஏற்கனவே சஹாபாட் ஏ.ஐ.எம்.-ஆக இருக்கின்ற 3,100 இந்திய பெண் தொழில் முனைவோரும் பயனடைவர் என எதிர் பார்க்கப் படுகின்ற நிலையில், ஆக மொத்தம் சுமார் 10,200 இந்திய பெண் தொழில் முனைவோருக்கு இந்த கூடுதல் நிதியானது அடுத்தக் கட்ட முன்னேற்றத்திற்கு வழிகோலும் என டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்தார்.

இச்சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 ஆயிரம் ரிங்கிட் வரைக்குமான வியாபாரக் கடனுதவிக்கு விண்ணப்பம் செய்யலாம். இதுவரை ஏ.ஐ.எம்.-இல் 3,100 இந்திய பெண் தொழில் முனைவோர்கள் பங்குப் பெற்றிருக்கின்றனர். அவர்களுக்கு 330.20 மில்லியன் ரிங்கிட் வியாபாரக் கடன் உதவி பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

கடந்த 37 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட ஏ.ஐ.எம் வழி, இதுவரை 968,321 தொழில்முனைவோர்களுக்கு 33.02 பில்லியன் நிதி கடனுதவியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதன் வழி 3.87 மில்லியன் குடும்பங்களை ஏழ்மை நிலையில் இருந்து மீட்டெடுக்கப்பட்டு இருக்கின்றனர்.

இவ்வாண்டு (2024) கிட்டத்தட்ட 317,229 தொழில் முனைவோருக்கு உதவும் பொருட்டு 2.61 பில்லியன் ரிங்கிட் ஏ.ஐ.எம். கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

# இந்திய அரசு சாரா அமைப்புகளுடன் அமைச்சர் ஹன்னா இயோ சந்திப்பு

**ஷா ஆலம்-**

கோல குபு பாருவிலுள்ள இந்திய அரசு சாரா அமைப்புகளுடன் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹன்னா இயோ நேற்று சந்திப்பு நடத்தினார்.

இந்த சந்திப்பில் இத்தொகுதியிலுள்ள எட்டு இந்திய அரசு சாரா அமைப்புகளோடு இளைஞர் இயக்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இச்சந்திப்பின் போது தொகுதி மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை வசதி, மருத்துவம் மற்றும் சமூக நலன் சார்ந்த பிரச்சனைகளை சம்பந்தப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்வைத்ததாக ஹன்னா இயோ குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் பெறப்பட்ட கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் இதர அமைச்சரவை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டு உரியத் தீர்வுகாண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் வாக்குறுதியளித்தார்.

கோல குபு பாரு பல்லின மக்கள் மற்றும் கலாசார கூறுகளை உள்ளடக்கிய தொகுதியாக விளங்குகிறது. ஆகவே, மறைந்த சட்டமன்ற உறுப்பினர் லீயைப் போல் அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு வேட்பாளரை தொகுதி மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினராக இருந்த லீ ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் ஆகிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பூர்வக்குடியினரின் குடியிருப்புகளில் களமிறங்கி சேவையாற்றி வந்தார். லீ போன்ற துடிப்புமிக்க சேவையாளர் வேட்பாளராக வர வேண்டும் என்பது தொகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று ஹன்னா இயோ சொன்னார்.

# 5 தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடு

**பெஸ்தாரி ஜெயா-**

தோட்டத் தொழிளாளர்கள் சொந்த வீடு வேண்டி 26 ஆண்டு கோரிக்கைக்கு பக்காத்தான் ஹரப்பான் மாநில மத்திய அரசுகள் தீர்வு கண்டது. நாட்டிலும், மாநிலத்திலும் தொழிலாளர்கள் மீதும், ஏழைகள் மீது பரிவுக் கொண்ட ஒரு அரசினால் மட்டுமே மக்கள் பயனடைய முடியும், என்பதற்கு சான்றாக அமைந்தது இன்றைய பக்காத்தான் ஹராப்பான் அரசின் சாதனை.

உலு சிலாங்கூர், கோலசிலாங்கூர் எல்லைகளில் வீற்றிருக்கும் 5 தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் சொந்த வீட்டை பெற நடத்தி வந்த நீண்ட போராட்டத்திற்கு தோட்ட முதலாளியுடன் மத்திய மாநில அரசுகள் இணைந்து மேற்கொள்ள வந்த நடவடிக்கை தொழிலாளர்களுக்கு சிறந்த விடிவை தந்தது.




5 தோட்டத் தொழிலாளர்களுக்கு மடாணி அரசும் சிலாங்கூர் மாநில அரசும் பெர்ஜாயா நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து தரை வீடுகள் கட்டித் தரும். இந்த வீடுகள் யாவும் 2026 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தியாகும் என்று எதிர்பார்ப்பதாக வீடமைப்பு ஊராட்சி துறை அமைச்சர் ஙா கொர் மிங் தெரிவித்தார்.

245 தொழிலாளர்கள் சொந்த வீட்டு பிரச்சனை கடந்த சில தினங்களாக நாட்டிலே பேசுபொருளாக உருவெடுத்தது. இப்பிரச்னைக்கு முறையாக தீர்வு காண வேண்டும் என்று பிரதமரும் சிலாங்கூர் மாநில மந்திரி புசாரும் பேசி முடிவு செய்தனர்.

இதனையொட்டி அமைச்சர் ஙாவிடம் பிரதமர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பண்டார் பெஸ்தாரி ஜெயா விலுள்ள சுங்கை திங்கி தோட்டத்திற்கு அருகே ஒதுக்கப்பட்ட 20 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே ஆட்சி என்பதால், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு இது, வேறு சாக்கு போக்கு போக்கும் இங்கு இடமில்லை என்பதால் தோட்ட உரிமையாளரும் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக செவி சாய்த்துள்ளார்.

தற்போது காலம் கணித்து 26 ஆண்டு கால சொந்த வீடு பிரச்னை தீர்வு க்கு வந்துள்ளது. 245 தொழிலாளர்களுக்கு வீடு கட்ட ரி.ம. 75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சார்பில் சிலாங்கூர் மாநில அரசு ரி.ம. 35 மில்லியன் வழங்கியுள்ளது. மடாணி அரசு ரி.ம. 40 மில்லியன் வழங்கியுள்ளது.

இந்த திட்டம் வெற்றியடைய நிதி ஒதுக்கீடு செய்த மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி, பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிமுக்கு தனது வாழ்த்தையும் நன்றியையும் அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் இந்த சொந்த வீடமைப்பு திட்டத்திற்கு 20 ஏக்கர் நிலத்தை கொடுத்த பெர்ஜாய நிறுவனத்திற்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

மாநில அரசு, மத்திய அரசு, பெர்ஜாயா நிறுவனம் ஆகிய மூன்று தரப்பினரும் கூட்டாக ஒன்று சேர்ந்து 5 தோட்டத்திலுள்ள 245 தொழிலாளர்களுக்கு சொந்த வீடு கட்டித்தர இருக்கின்றனர் என்று அமைச்சர் ஙா தெரிவித்தார்.

அமைச்சருடன் சிலாங்கூர் மாநில அரசு ஆட்சிக் குழு உறுப்பினர் துவான் பாப்பா ராய்டு, செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ், உலு சிலாங்கூர் பி.கே.ஆர் தலைவர் டாக்டர் சத்தியபிரகாஷ், புந்தோங் சட்டமன்ற உறுப்பினர் புவான் துளசி, ஜ.செ.க. தலைவர்கள், பி.கே.ஆர் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கோல சிலாங்கூர் மாவட்ட அதிகாரி, கோல சிலாங்கூர் நகராண்மை கழக தலைவர் மற்றும் இந்திய சமுதாயத் தலைவர்கள், பி.எஸ்.எம் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், 5 தோட்ட தொழிலாளர்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.



# பெண் தொழில்முனைவோருக்கு வெ.50,000 வரை பிரத்தியேகக் கடனுதவி

**ஷா ஆலம்-** மாநிலத்தில் சிறு தொழில் தொடங்க விரும்பும் பெண் தொழில்முனைவோருக்கு 50,000 வெள்ளி வரையிலான மூலதன கடனுதவியை யாயாசன் ஹிஜ்ரா சிலாங்கூர் (ஹிஜ்ரா) வழங்குகிறது.

நியாகா டாருல் எஹ்சான் (நாடி) திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற விரும்புவோர் https://mikrokredit.selangor.gov.my என்ற இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அந்த அறவாரியம் தனது முகநூல் பதிவில் கூறியது.

குறிப்பாக சிலாங்கூர் டாருள் ஏஹ்சானில் உள்ள பெண் தொழில்முனைவோருக்கு! சிறு தொழில் தொடங்க விரும்பும் பெண்களுக்கு டாருல் ஏஹ்சான் வணிகக் கடனுதவித் திட்டம் (நாடி) 50,000 வெள்ளி வரை நிதியுதவி வழங்குகிறது.

விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் பிரசுரத்தின் கியூ.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கலாம் அல்லது மேலும் தகவலுக்கு அருகிலுள்ள ஹிஜ்ரா கிளையை தொடர்பு கொள்ளலாம் என்று அது தெரிவித்தது.

தொழில்முனைவோர் சமீபத்திய மற்றும் நவீன தளங்கள் மூலம் தங்கள் வணிக முறைகளை இலக்கவியலுக்கு மாற்றுவதற்கு உதவும் நோக்கில் கோ டிஜிட்டல் திட்டம் உருவாக்கப்பட்டது.

உற்பத்தி மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கான திறனை அதிகரிக்க டிஜிட்டல் மார்க்கெட்டிங் முறை உதவுகிறது. இதன் மூலம் இணைய விற்பனை வாயிலாக லாபத்தை அதிகரிக்க முடியும். இது குறித்த மேலும் தகவலுக்கு www.hijrahselangor.com என்ற அகப்பக்கத்தை பார்வையிடலாம்.

ஹிஜ்ரா சிலாங்கூரின் ஒன்பதாம் ஆண்டு நிறைவையொட்டி இவ்வாண்டு தொழில்முனைவோருக்கு 100 கோடி வெள்ளி கடன் வழங்க ஹிஜ்ரா இலக்கு நிர்ணயித்துள்ளது.

# டிடிஐ நேரடி முதலீடு RM39 பில்லியன்

**கோலாலம்பூர்-** சிலாங்கூர் கடந்த ஆண்டு உள்நாட்டு நேரடி முதலீட்டில் (டிடிஐ) RM39 பில்லியனை பதிவு செய்துள்ளதாக முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த முதலீட்டு மதிப்பான RM55.3 பில்லியனில் கிட்டத்தட்ட 70 சதவிகிதம் என்று இங் சி ஹான் கூறினார்.

"எஃப்.டி.ஐ (அந்நிய நேரடி முதலீடு) உடன் ஒப்பிடும்போது டி.டி.ஐ.யின் விகிதம் பெரியது. இது சிலாங்கூர் வலுவான வணிகச் சூழலைக் கொண்டுள்ளது மற்றும் முதலீடு வளர ஏற்றது என்பதை நிரூபிக்கிறது," என்று அவர் இன்று CXO கிளப் திறப்பு விழாவில் கூறினார்.

குறிப்பிட்ட சூழ்நிலையுடன், கிளப் தொடங்குவது பொருத்தமானதாகவும், வளரும் தொழில் முனைவோருக்கு உலக அளவில் இடமளிக்கக் கூடியதாகவும் காணப்படுவதாக அவர் கூறினார்.

"தேசிய பொருளாதாரம் சரியான பாதையில் உள்ளது. இது முதலீட்டாளர்கள் அதிக வருமானத்தை ஈட்டுவது எளிதாக்குகிறது," என்று அவர் கூறினார்.

இந்த மாதத் தொடக்கத்தில், மலேசிய முதலீட்டு மேம்பாட்டு வாரியம் (மீடா) கடந்த ஆண்டு சிலாங்கூர் ரிங்கிட் 55.3 பில்லியன் முதலீட்டை பெற்றதாக அறிவித்தது. இது நிர்ணயிக்கப்பட்ட RM45 பில்லியன் இலக்கை தாண்டியது.

மேலும், 2022இல் பெறப்பட்ட RM12.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், உற்பத்தித் திட்டங்கள் அல்லது உற்பத்தித் துறை கடந்த ஆண்டு RM19.3 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் ஏஜென்சி தரவு காட்டுகிறது.

# ஜெர்மன் தொழில்நுட்ப மாநாட்டில் சிலாங்கூர் பங்கேற்பு

**அம்பாங்-** ஜெர்மனியில் நடைபெறும் அனைத்துலக நிலையிலான பிரசித்தி பெற்ற பொறியியல் தொழில்நுட்ப, இயந்திரவியல் மற்றும் மின்னியல் மாநாடான 'ஹென்னோவர் மெஸ்ஸி'யின் தொடக்க விழாவில் கலந்து கொள்ளும் மலேசியாவின் ஒரே மாநிலமாகச் சிலாங்கூர் விளங்குகிறது.

சிலாங்கூர் மாநிலத்திற்கும் மலேசியாவுக்கும் தேவைப்படும் நிபுணத்துவத்தையும் தொழில்நுட்பத்தையும் கொண்டு வருவதற்கு இந்த நிகழ்வு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

உலகின் பிரசித்தி பெற் நிறுவனங்களான மைக்ரோசோப்ட், கூகுள், அமேசோன் இணையச் சேவை, டெல், ஏஸ்ஏபி, சீமேன்ஸ், போஷ் மற்றும் உலகம் முழுவதும் உள்ள தொடக்க நிறுவனங்கள் பங்கு கொள்ளும் இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு, காலநிலை நட்புறவு உற்பத்தி மற்றும் பசுமைத் தொழில்நுட்பத் தீர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

சிலாங்கூர் மற்றும் மலேசியாவுக்கு தேவைப்படும் தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத் கொண்டு வருவது எங்களின் தலையாய நோக்கமாகும் என அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்தார்.

இந்த மாநாட்டையொட்டி நடைபெறும் ஆய்வரங்கில் தென்கிழக்காசியாவின் இதர மூன்று பேராளர்களுடன் அமிருடினும் பங்கேற்கிறார். ஆசியானின் ஆக்கத்திறன் இலக்கை மேம்படுத்துவதில் அரசாங்கம் மற்றும் தொழில்துறையின் ஒத்துழைப்பு குறித்து அவர் உரையாற்றுவார்.

தொழில்திறன் மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியில் முன்னோடி மாநிலமாக விளங்குவதில் சிலாங்கூரின் திட்டங்கள் மற்றும் அது எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும் அமிருடின் எடுத்துரைப்பார்.

# முதலீடுகளை ஈர்க்க செமிகண்டக்டர் துறைகளில் அரசு கவனம்

**கோல லங்காட்-** மாநிலப் பொருளாதாரத்தை உந்தச் செய்வதற்கு ஏதுவாக சிப்பாங்கில் அனைத்துலக வான் போக்குவரத்து பூங்காவை அமைப்பது உள்பட மூன்று முக்கிய துறைகளில் மாநில அரசு இவ்வாண்டு கவனம் செலுத்தவுள்ளது.

செமிகண்டக்டர் துறைகளில் புதிய வாய்ப்புகளைக் கண்டறிவது தவிர்த்து முதலீட்டை ஈர்ப்பதற்கான வியூகங்களில் ஒரு பகுதியாக நிதி வசதியை ஏற்படுத்தித் தருவது குறித்தும் மாநில அரசு ஆலோசித்து வருகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இவ்வாண்டிற்கான இலக்காக வான் போக்குவரத்து பூங்கா திட்டம் விளங்குகிறது. காரணம், இதில் சிறப்பான உத்தரவாத அம்சங்களை நாம் கண்டறிந்துள்ளோம். மத்திய தவணைக்கான ஆய்வின் அடிப்படையில் நிதி வசதி தொடர்பான அறிவிப்பை வெளியிடுவோம் என அவர் குறிப்பிட்டார்.

செமிகண்டக்டர் துறைகளிலும் வாய்ப்புகளை நாம் கண்டறியவிருக்கிறோம். சூழியல் முறையை உயர்த்துவதற்கான ஆற்றலை இத்துறை கொண்டுள்ளது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் அதிகமான முதலீடுகளை நாட்டிற்குள் கொண்டு வரும். இந்த வாய்ப்பினை சிலாங்கூரும் தவறவிடாது என்றார் அவர்.

முதலாவது சிலாங்கூர் திட்டத்தில் முதலீட்டு வாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ள வங்கிகள் உள்பட பல நிதி நிறுவனங்களிடம் நாங்கள் இது குறித்து பேச்சு நடத்தியுள்ளோம். இந்த திட்டத்தின் செயலாக்கத்தை ஒருங்கிணைப்பதற்கு நம்முடைய நிதிக் கையிருப்பை பயன்படுத்துவோம் என்று அவர் தெரிவித்தார்.

செமிகண்டக்டர் துறை இவ்வாண்டில் 300 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்கும் எனத் தாங்கள் மதிப்பிடுவதாகவும் இதன் மூலம் அதிகமான வேலை வாய்ப்புகளும் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

இந்த திட்டத்திற்கு பொருத்தமான இடங்களை பூச்சோங், சுபாங் மற்றும் ஷா ஆலமில் அடையாளம் கண்டுள்ளோம். சீனா உள்ளிட்ட நாடுகளுடன் இத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

# மக்கள் நல்வாழ்வுக்கான உதவிகள், மாவட்டத்தில்

# தொடர வாக்களிப்போம்



## பாங் சோக் தாவ்

### கோல குபு பாரு

கோலக் குபு பாரு சட்டமன்ற இடைத்தேர்தல் ஜ.செ.க பக்காத்தான் ஹரப்பான் கூட்டணியின் வேட்பாளராகப் பாங் சோக் தாவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 31 வயதான பாங் சோவ் தாவ் அம்பாங் வட்டாரத்தை சேர்ந்தவர். யூனிடென் என்னும் தெனாகா நேஷனல் பல்கலைக்கழகத்தின் மின்சாரம் மின்னியல் பட்டதாரியான அவர் 2018 -2020 வரை-யிலான காலத்தில் தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் அமைச்சரின் செயலாளராக பணியாற்றினார். 2020 -2022 காலக்கட்டத்தில் ஜ.செ.க பிரச்சார ஊடகமான ஊபா டிவி என்னும் ஊடகத்தின் தயாரிப்பாளராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பக்காத்தான் ஹராப்பானுக்கு வாக்களியுங்கள்!**

HARAPAN X

## தேர்தல் வாக்குறுதி

### பொருளாதாரம்

உலு சிலாங்கூரில் தொழில்துறை வளர்ச்சி. உள்ளூர் சுற்றுலா மற்றும் தொழில்முனைவோர் ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

### வசதிகள்

பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல் இணைய வேகத்தை அதிகரித்தல்

### சுற்றுச்சூழல்

நிலையான மேம்பாடு மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்பை உறுதி செய்தல் உள்ளூர் மக்களின் பொழுதுப் போக்கு வாழ்க்கையை பிரகாசமாக்குதல்

### பாரம்பரியம்

கோல குபு பாருவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்

### மக்கள் நலன்

சமுதாயத்தில் யாரும் ஓரங்கட்டப்படாமல் இருக்க மக்களின் நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்துதல்

## பக்காத்தான் ஹராப்பானின்
## சாதனை

**சிலாங்கூரில் 98 தமிழ்ப் பள்ளிகளுக்கு ஆண்டுக்கு 50 லட்சம் மானியம்**

தமிழ்ப் பள்ளிகளைச் சேர்ந்த 3594 மாணவர்களுக்கு ஆண்டுக்கு 11 லட்சம் பேருந்து கட்டணம்

**சிலாங்கூரில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தங்கி படிக்க 2 விடுதிகள்**

மக்களுக்கு மாநிலம் முழுவதும் வேலை வாய்ப்பு

**மக்கள் நல்வாழ்வுக்கு தினம் ஒரு திட்டம்**

இங்குள்ள மக்கள் பல பொருளாதாரச் சவால்கள் எதிர்நோக்கிய நேரங்களில் உதவியவர்களின்

**அறிவுரையை கேட்டு வாக்களிப்போம்!**

## பெரிக்காதான் நேஷனலின்
## வேதனை

**புறம் பேசி திரிபவர்களால் நமக்கு என்ன நன்மை?**

எடுத்த பணியில் தோல்வியைக் கண்டு தூக்கி எறியப் பட்டவர்களும், நாட்டை விட்டு ஓடியவர்களால் நன்மையா?

**பெரிக்காத்தான் MP - தாய்மொழிக் கல்விக்கு எதிராக குரல்**

கிளாந்தான் மாநிலத்தில் உள்ள ஒரே தமிழ்ப்பள்ளிக்கு உதவ முடியாத பாஸ் - பெரிக்காத்தான் ஆட்சி!

**கிளாந்தானில் 20 தமிழ்ப்பள்ளி மாணவர் பேருந்து கட்டணத்திற்கு அலையும் அவலம்**

பெரிக்காத்தான் ஆளும் மாநில மக்களுக்கு: முறையான குடிநீர், சாலை, அடிப்படை வசதிகள் மற்றும் வேலை வாய்ப்பு இல்லை.

**அவர்கள் பக்காத்தான் ஹராப்பான் மாநிலங்களில் பிழைப்பை தேடி, கல்வியைத் தேடி வருகிறார்கள்.**

**மக்கள் நல்வாழ்வுக்கு வழி காண தவறிய இனச் சமயத் தீவிரவாத ஆட்சி வேண்டுமா?**



# பள்ளிப் பேருந்துக் கட்டண மானிய ஒதுக்கீடு RM1.1 மில்லியன்

**உலு சிலாங்கூர்-**

இந்த ஆண்டு சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள தமிழ் பள்ளிகளுக்கான பள்ளிப் பேருந்துக் கட்டண மானியத்தை வழங்க மாநில அரசு மொத்தம் RM1.1 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட பள்ளிகள் பெரும்பாலும் மாநிலத்தின் உட்பகுதியில் அமைந்துள்ளதுடன், மாணவர்களின் குடும்பங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன என்று வறுமை ஒழிப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பா ராய்டு கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், உலு சிலாங்கூர் மாவட்டத்தைச் சுற்றி மொத்தம் 324 தமிழ்ப்பள்ளி மாணவர்கள் RM97,200 ஒதுக்கீட்டில் பள்ளி பேருந்து கட்டண மானிய வவுச்சர்களை பெற்றுள்ளனர்.

"இந்த உதவி பெரும்பாலும் B40 குடும்பங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது, காரணம் அவர்களில் பல பேர் தங்கள் சொந்தப் பகுதியிலிருந்து வெகு தொலைவில் உள்ள பள்ளிக்குச் செல்கிறார்கள்.

"இந்த உதவி தேர்தலுக்காக வழங்கப்படவில்லை. உண்மையில் ஒவ்வொரு ஆண்டும் எனது போர்ட்ஃபோலியோவின் கீழ் இந்த மானியத் திட்டம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பெறுநர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருக்கிறோம், ஏனெனில் உதவி பெறும் மாணவர்கள் கட்டாயம் B40 குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை சேர்ந்திருக்க இருக்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அவர்கள் கலந்து கொண்ட பள்ளிப் பேருந்துக் கட்டண மானியத் திட்டம் மற்றும் சிலாங்கூர் வறுமை ஒழிப்பு திட்ட நிகழ்விற்குப் பிறகு வீ.பாப்பாராய்டு இவ்வாறு கூறினார். இந்நிகழ்வு பத்தாங் காலி பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கிடையில், துப்புரவுத் தொழிலாளியாக வேலை செய்யும் கே சாந்தி (42), பெற்ற RM300 மானியம் தனது மகனின் பள்ளி வேன் கட்டணத்தை மூன்று மாத காலத்திற்கு ஈடுசெய்யும் என்றார்.

"பள்ளி வேனின் கட்டணம் ஒரு மாதத்திற்கு RM100 ஆகும். எனவே இந்த மானியம் மூன்று மாதத்திற்கு எனக்கு உதவி செய்யும் மற்றும் உணவு போன்ற பிற தேவைகளை வாங்குவதற்கு வழிவகை செய்யும்," என்று அவர் கூறினார்.

தனது மூன்று குழந்தைகள் பள்ளியில் பயின்று வருவதாகவும், அவர்களுக்கு நிறைய செலவு செய்ய வேண்டி இருப்பதாகவும், போக்குவரத்துத் துறை ஊழியர் (38) கே.கண்ணன் தெரிவித்தார்.

"ஒருவேளை சிலர் RM300ஐ சிறிய தொகையாகப் பார்க்கலாம், ஆனால் சிரமப்படும் எங்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும்" என்று அவர் கூறினார்.

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வேண்டாம்



**கிள்ளான்-**

அரசியல் சந்தர்ப்பவாதத்தின் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகளை நாம் தவிர்க்க வேண்டும் என்பதோடு கற்றறிந்த மக்கள் என்ற முறையில் குற்றச்சாட்டுகள் ஊகத்தை அடிப்படையாக அல்லாமல் வலுவான ஆதாரத்தைக் கொண்டு இருப்பதை உறுதி வேண்டும் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், இந்திய பெண் தொழில்முனைவோருக்கான அமானா இக்தியார் மலேசியாவின் கீழ் 5 கோடி வெள்ளி கடனுதவித் திட்டம் வரவிருக்கும் கோல குபு பாரு இடைத்தேர்தல் நடைபெறும் தருணத்தில் வெளியிடப்பட்டது குறித்து பேராசிரியர் ராமசாமி எழுப்பிய சமீபத்திய கவலைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தை தாம் உணர்வதாக அவர் சொன்னார்.

நமது சமூகத்தின் நலன்களை முன்னிறுத்துவதில் பேராசிரியர் ராமாசாமியின் விழிப்புணர்வையும் அர்ப்பணிப்பையும் நான் பாராட்டினாலும், இந்த விஷயங்களில் மிகவும் சமநிலையான பார்வையை வழங்குவது முக்கியமானது என்று நான் நம்புகிறேன்.

முதலாவதாக, கடன் திட்டம் போன்ற அரசாங்க முன் முயற்சிகளின் நேரத்தை ஆராய்வது புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும், அரசியல் சந்தர்ப்பவாதத்தின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நாம் தவிர்க்க வேண்டும். கற்றறிந்த மக்களாகிய நாம் நமது விமர்சனங்களை ஊகங்களை விட ஆதாரத்தின் அடிப்படையில் வைக்க வேண்டும்.

இந்தியப் பெண் சிறு தொழில் முனைவோருக்கான நிதி ஒதுக்கீடு, வரலாற்று ரீதியாக சமூக-பொருளாதார சவால்களை எதிர்கொண்ட நமது சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு அதிகாரம் அளிக்க, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் கூட்டுறவு துணை அமைச்சர் டத்தோ ஆர். ரமணன் தலைமையிலான பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

நிதியின் அளவு விவாதிக்கப் பட்டாலும், அது உதவ விரும்புவோரின் வாழ்க்கையில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கத்தை மறந்துவிடக் கூடாது.

கடன்கள் வடிவில் நிதி ஆதரவை வழங்குவதன் மூலம், தனிநபர்கள் தங்கள் பொருளாதார எதிர்காலத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அதிகாரம் அளிக்கிறது, அதே நேரத்தில் பெறுநர்கள் தங்கள் வணிகங்களில் முதலீடு செய்வதற்கும் பொருளாதார சுதந்திரத்தைத் தொடரவும் வாய்ப்பளிக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

# ஆயிரக்கணக்கான பி40 தரப்பினர் பலனடைந்தனர்

**புத்ராஜெயா-**

ஷா ஆலம், கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற மாநிலத் தேர்தலுக்குப் பின்னர் மாநில அரசின் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் வாயிலாகக் கோல குபு பாருவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பலனடைந்துள்ளனர்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் இவ்வாண்டு மார்ச் வரை சிலாங்கூர் பெண்யாயாங் முன்னெடுப்பின் மூலம் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பைச் சேர்ந்த தனித்து வாழும் தாய்மார்கள், மூத்த குடிமக்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு உதவிகளைப் பெற்றுள்ளனர்.

பிங்காஸ் எனப்படும் சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் மூலம் 336 தனித்து வாழும் தாய்மார்கள் உதவி பெற்றுள்ளனர். இவர்களுக்கு மாதம் 300 வெள்ளி வீதம் ஆண்டுக்கு 3,600 வெள்ளி வழங்கப்படுகிறது. இன வாரியாக உதவி பெற்றவர்கள். எண்ணிக்கை வருமாறு-

- **161 மலாய்க்காரர்கள்**
- **40 சீனர்கள்**
- **100 இந்தியர்கள்**
- **35 பூர்வக்குடியினர்**

இதே காலகட்டத்தில் மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டத்தின் கீழ் 7,962 முதியோருக்கு தலா 200 வெள்ளி மதிப்பிலான ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகள் வழங்கப்பட்டன.



இன வாரியாக பற்றுச் சீட்டுகள் பெற்றவர்கள் எண்ணிக்கை வருமாறு-

- **2,624 மலாய்க்காரர்கள்**
- **3,857 சீனர்கள்**
- **1,338 இந்தியர்கள்**
- **143 பிற இனத்தினர்**

தாபோங் வாரிசான் அனாக் சிலாங்கூர் (தாவாஸ்) திட்டத்தின் கீழ் 405 மாணவர்களுக்குப் பள்ளி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

- **புத்தகப் பை**
- **எழுதுபொருள்கள்**
- **உணவுக்கலம்**
- **உண்டியல்**

இவை தவிர, இல்திஸாம் சிலாங்கூர் பெண்யாயாங் முன்னெடுப்பில் இடம் பெற்றுள்ள 40 திட்டங்களில் மூன்றின் கீழ் ரொக்க நிதியுதவியைப் பெறுவதற்கான தகுதியை வட்டார மக்கள் பெற்றனர்.

- **கம்போங் சுங்கை ஜாங் கெர்லிங்கை சேர்ந்த 11 குடும்பங்கள்**
- **கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வெ.12,300**

மேலும், சுமையைக் குறைக்கும் விதமாக 240 மோட்டார் சைக்கிளோட்டிகளுக்கு 40 வெள்ளி மதிப்பிலான மசகு எண்ணெய் வழங்கப்பட்டது

# மாமன்னர் தம்பதியரின் வைசாகி மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்



**கோலாலம்பூர்-**
வைசாகி மற்றும் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடும் நாட்டிலுள்ள சீக்கியர்கள் மற்றும் தமிழர்களுக்கு மாட்சிமை தங்கிய பேரரசர் சுல்தான் இப்ராஹிம் மற்றும் பேரரசியார் ராஜா ஜரித் சோஃபியா தம்பதியர் தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

சகிப்புத் தன்மையும் பரஸ்பர மரியாதையும் நாட்டின் ஒற்றுமைக்கான தூண்களாக எப்போதும் விளங்கி வருகின்றன என்று பேரரசர் தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் கூறியுள்ளார்.

நான் ஏற்கனவே வலியுறுத்தியது போல் பன்முகக் கலாச்சார ஒற்றுமை என்னைப் பொறுத்த வரை பொருள் பொதிந்த பரிசாகும். நாட்டின் நீடித்த நிலைத்தன்மைக்கு இன, சமய வேறுபாடுகளை கடந்த நல்லிணக்கமும் ஒற்றுமையும் மிகவும் அவசியமாகும் என அவர் குறிப்பிட்டார்.

வைசாகி மற்றும் தமிழ்ப் புத்தாண்டு அப் பெருநாளைக் கொண்டாடும் மக்களுக்கு மகிழ்ச்சியைக்கொண்டுவரதாம்வாழ்த்துவதாகவும் பேரரசர் தெரிவித்தார்.

# சுங்கை பூலோவில் சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்

**சுங்கை பூலோ-**
சுங்கை பூலோ நாடாளுமன்ற அளவில் சித்திரை புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சுங்கை பூலோ நாடாளுமன்ற தொகுதி உறுப்பினரும் தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத் துறை துணை அமைச்சருமான டத்தோ ரமணன் தலைமையில் கொண்டாடப் பட்டது.

சுங்கை பூலோ கம்போங் பாருவில் உள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் 500க்கும் மேற்பட்ட இந்துக்கள் கலந்து சிறப்பித்தனர். கோவில் நிர்வாகம் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கு வர்ணம் தீட்டும் போட்டி நடத்தியது.

இத்தொகுதியில் உள்ள ஆர்.ஆர்.ஐ. மற்றும் சுங்கை பூலோ தமிழ்ப்பள்ளி மாணவர்களும் போட்டியில் கலந்துக் கொண்டு வெற்றி பெற்றனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கூடுதலாக தலா ஒருவருக்கு ரி.ம. 500.00 கொடுத்து கல்வியில் வெற்றி பெற வேண்டும் என்று டத்தோ ரமணன் கேட்டுக் கொண்டார்.

4ஆம், 5ஆம், 6ஆம் ஆண்டு மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற 9 மாணவர்களுக்கு மொத்தம் 4,500.00 கொடுத்து கௌரவித்தார்.

மேலும் புத்தாண்டை ஒட்டி கோவிலுக்கு வருகை தந்த 300 சிறார்களுக்கு இனிப்பு பலகாரம் மற்றும் ரி.ம. 50.00 கொடுத்து கௌரவித்தார். இதே போல் வறுமையில் வாடும் வசதி குறைந்த 150 இந்திய குடும்பங்களுக்கு சமையல் பொருட்கள் கொடுத்து உதவினார்.

இந்த கொண்டாட்டத்திற்கு பிறகு டத்தோ ரமணன் சுங்கை பூலோ நாடாளுமன்ற தொகுதியில் உள்ள 6 இந்து ஆலயங்களுக்கு சென்று மானியம் வழங்கி சிறப்பித்தார். தனது நாடாளுமன்ற அலவன்ஸ் எடுத்துக் கொள்ளாமல் பொது மக்களுக்கும் வழி பாட்டு தளங்களுக்கும் ஆண்டுதோறும் கொடுத்து வருகிறார்.

கடந்த ஆண்டு மட்டும் ரி.ம. 332,000.00 மானியமாக கொடுத்து சிறப்பித்தார். இவ்வாண்டு சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி 6 ஆலயங்களுக்கு தனது மானியத்தை கொடுத்ததின் வழி பொதுத் தேர்தல் வாக்குறுதியை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்.

இந்நிகழ்வில் ஆலய அறங்காவலர் டத்தோ ரத்தினம், சிறப்பு செயலாளர் டத்தோ அன்பு மணி , நாடாளுமன்ற அதிகாரி தமிழ் செல்வம் மற்றும் சுற்று வட்டார இந்திய அரசியல் தலைவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## கோல குபு பாரு இடைத்தேர்தலில் மறைந்த லீயின் சேவைகள் முன்னிலைப்படுத்தப்படும்




**ஷா ஆலம்-**
வரவிருக்கும் கோல குபு பாரு இடைத்தேர்தலில் பக்காத்தான் ஹராப்பானின் முக்கிய கவனம் அத்தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லீ கீ ஹியோங்கின் அர்ப்பண உணர்வுடன் கூடிய பணியை முன்னிலைப்-படுத்துவதாக இருக்கும் தொகுதி தேர்தல் இயக்குநர் இங் ஸீ ஹான் கூறினார்.

வேட்பாளர்களின் பெயர் பட்டியல் ஜசெக தலைமைத்-துவத்திற்கும் பின்னர் ஹராப்பான் மத்திய தலைமைக்கும் விரைவில் அனுப்பப்படும் என்று அவர் தனது முகநூல் பதிவில் தெரிவித்தார்.

சமூகத்திற்கு சேவை செய்வதில் அர்ப்பணிப்புடன் இருந்த மறைந்த சட்டமன்ற உறுப்பினர் லீ கீ ஹியோங்கின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவது கோல குபு பாருவில் பக்காத்தான் ஹராப்பானின் முதன்மை இலக்காக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சிலாங்கூரில் உள்ள ஒற்றுமை அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் கோல குபு பாரு மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய சிலாங்கூர் ஜசெக உறுதிபூண்டுள்ளது என்று மாநில ஜசெக செயலாளருமான அவர் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கோல குபு பாரு இடைத்தேர்தலுக்கு தம்மீது நம்பிக்கை வைத்து தேர்தல் இயக்குநராக பொறுப்பு வழங்கிய சிலாங்கூர் பக்காத்தான் ஹராப்பான் மற்றும் ஜசெக தலைமைக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் சொன்னார்.

கோல குபு பாரு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 11ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஏப்ரல் 27ஆம் தேதியும் தொடக்கக் கட்ட வாக்களிப்பு மே 7ஆம் தேதியும் நடைபெறும் என தேர்தல் ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் கானி சலே அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஜசெக பிரதிநிதியான லீ கீ ஹியோங் புற்று நோய் காரணமாக கடந்த மார்ச் 21ஆம் தேதி காலமானதைத் தொடர்ந்து அத்தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறுகிறது. 58 வயதான லீ, கடந்த 2013 முதல் மூன்று தவணைகளாக கோல குபு பாரு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

கடந்த 2022 இல் நடைபெற்ற நாட்டின் 15வது பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் ஏழாவது இடைத் தேர்தல் இதுவாகும்.

## கோல குபு பாரு தொகுதியை வெல்வோம் என்ற கனவு வேண்டாம்

**உலு சிலாங்கூர்-**
அடுத்த மாதம் நடைபெற இருக்கும் இடைத் தேர்தலில் கோல குபு பாரு தொகுதியை வெல்வோம் என கனவு காண வேண்டாம் என பெரிக்காத்தான் நேஷனல் கூட்டணிக்கு உலு சிலாங்கூர் கெஅடிலான் தலைவர் டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜன் நினைவூட்டியுள்ளார்.

கோல குபு பாரு தொகுதியில் யார் போட்டி போடுவதையும் பக்கத்தான் ஹராப்பான் வரவேற்கிறது. சில இந்தியத் தலைவர்கள் பெரிக்கத்தான் நேஷனலுடன் குறிப்பாகப் பாஸ் கட்சியுடன் ஒத்துழைப்பை காண்கிறோம்.

அவர்களுக்கு நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். கோல குபு பாரு தொகுதியைக் கைப்பற்றலாம் என கனவு காணாதீர்கள். மறைந்த சட்டமன்ற உறுப்பினர் லீ கீ ஹியோங்கின் சாதனைகள் இத்தொகுதியில் வெற்றியைத் தீர்மானிக்கும் அளவுகோலாக விளங்கும் என்று மலேசியாகினிக்கு அளித்த பேட்டியில் அவர் சொன்னார்.

மாநில அரசின் அளப்பரிய சேவைகள் மற்றும் அடைவு பக்கத்தான் ஹராப்பான் இந்த தொகுதியை தக்க வைத்துக் கொள்வதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தும் எனத் தாம் நம்புவதாகவும் பிரகாஷ் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று தவணைகளாக ஜசெக வெற்றி பெற்ற கோல குபு பாரு தொகுதியைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு தங்களுக்கு பிரகாசமாக உள்ளதாக பாஸ் கட்சியின் தலைமைச் செயலாளர் டத்தோஸ்ரீ தக்கியுடின் ஹசான் கூறியிருந்தது தொடர்பில் சத்திய பிரகாஷ் இவ்வாறு கருத்துரைத்தார்.

இத்தொகுதியில் எதிர்வரும் ஏப்ரல் 27ஆம் தேதி வேட்பு மனுத் தாக்கல் நடைபெறவுள்ள வேளையில் முதல் கட்ட வாக்களிப்பு மே 7 ஆம் தேதியும் தேர்தல் மே 11 ஆம் தேதியும் நடைபெறும்.



ஒற்றுமை அரசாங்கத்தின் தலைமை மற்றும் ஆதரவாளர்கள் இணைந்து கோல குபு பாரு இடைத்தேர்தல் வேட்பாளரான பாங் சோக் தாவோவிற்கு ஆதரவைத் தெரிவித்தனர்.



சிலாங்கூர் ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கோல குபு பாரு இடைத்தேர்தல் வேட்பாளரான பாங் சோக் தாவோவுடன் வேட்பாளர் அறிவிப்பு விழாவில். 27 ஏப்ரல் 2024

# கோல குபு பாரு இடைத்தேர்தல்
# மக்கள் சந்திப்பு




29 ஏப்ரல் 2024 அன்று உலு சிலாங்கூரில் உள்ள கம்போங் துன் அப்துல் ரசாக்கில் பழங்குடியின மக்களுடன் ஒற்றுமை அரசாங்க வேட்பாளர் பாங் சோக் தாவ்.




ஐ பி எப் ஏற்பாட்டிலான மக்கள் சந்திப்பு கூட்டத்தில் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் பாங் சோக் தாவ்



ஜ.செ.க துணைத்தலைவர் கோபிந் சிங்குடன் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் பாங் சோக் தாவ், உலு சிலாங்கூர் ராசா சீக்கியர் ஆலயத்தில் சீக்கிய வாக்காளர்களை சந்தித்தபொழுது



பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் பாங் சோக் தாவ் பண்டார் துன் ராசா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டத்தின் ஸ்ரீ டாக்டர் வான் அசிசாவுடன் கெர்லிங் தோட்டத் தமிழ்ப்பள்ளிக்கு வருகை புரிந்த போது.

# ஹரி ராயா ஐடில்பித்ரி கொண்டாட்டம்



சிலாங்கூர் சுல்தான் மக்களுடன் இணைந்து நோன்பு துறந்தார் மற்றும் தெங்கு அம்புவான் ஜெமஹா மசூதி, புக்கிட் ஜெலுதோங், ஷா ஆலமில் ஹரி ராயா நன்கொடைகளை வழங்கினார். - 3 ஏப்ரல் 2024.



பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் 12 ஏப்ரல் 2024 அன்று பண்டார் உத்தாமா பத்தாங் காலி மசூதியில் நடைபெற்ற விருந்து உபசரிப்பிலும் மற்றும் வெள்ளிக்கிழமை தொழுகையிலும் விருந்தினர்களுடன் நட்பு பாராட்டினார்.



டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின், 27 ஏப்ரல் 2024 அன்று உலு சிலாங்கூரில் உள்ள பெக்கான் கோலா குபு பாருவில் நடைபெற்ற சிலாங்கூர் ஐடில்பித்ரி 2024 திறந்த இல்ல உபசரிப்பில் பொதுமக்களுடன் நட்பாகப் பழகினார்.



1 மே 2024 அன்று செந்தோசா தொகுதியில் உள்ள லாமன் மஸ்மிடாவில் நடைபெற்ற ஹரி ராயா ஐடில்பித்ரி திறந்த இல்ல உபசரிப்பில் சுமார் 1200 பேர் கலந்து கொண்டனர்.



கோத்தா கெமுனிங் தொகுதி மசூதி, சூராவ் மற்றும் எம்பிபி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இணைந்து கோத்தா பெர்மாய் கோல்ஃப் மைதானத்தில் இப்தார் விழாவை நடத்தியது. – 1 ஏப்ரல் 2024



6 மே 2024 அன்று புக்கிட் ராஜா, கிள்ளானில் உள்ள எம்பிடிகே மண்டபத்தில் நடைபெற்ற ஐடில்பித்ரி விழாவில் டத்தின் படுகா நோரைனி ரோஸ்லான் உறுப்பினர்களுடன் கலந்து கொண்டார்.

# அளப்பரிய சேவைகளால் மக்களின் மனம் கவர விரும்புகிறேன்

**உலு சிலாங்கூர்-**

தனது தோற்றத்தை மூலதனமாகக் கொள்ளாமல் சிறப்பான சேவைகளை வழங்குவதன் வாயிலாக கோல குபு பாரு மக்களின் தனதைக் கவர தாம் விரும்புவதாக ஒற்றுமை அரசின் வேட்பாளர் கூறுகிறார்.

கடந்த ஒரு வார காலமாக இத்தொகுதியில் மேற்கொண்டு வரும் பிரசாரத்தின் போது தாம் முன்வைக்கும் முக்கிய விஷயம் இதுவாகும் என்று பாங் சோக் தா (வயது 31) தெரிவித்தார்.

நான் அழகாகஇருப்பதாக சிலர் கருதுகின்றனர். மேலும் சிலரோ நான் பருமனாகவும் அழகின்றியும் உள்ளதாக கூறுகின்றனர். ஆனால், நான் புறத் தோற்றத்தைக் கொண்டு மக்களின் மனம் கவர நான் விரும்பவில்லை. காரணம், புறத் தோற்றம் காலத்தால் மாற்றம் மாறக்கூடியது.

இங்குள்ள மக்கள் வளப்பத்துடன் வாழ்வதற்கான மேம்பாட்டை வலியுறுத்தும் செய்தியை மட்டுமே அவர்களிடம் சேர்ப்பிக்க விரும்புகிறேன். தொகுதி மக்கள் மறவாமல் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன் அவர் அவர் குறிப்பிட்டார்.

நிலையான அரசாங்கம், பொருளாதார மீட்சி மக்களுக்கு உதவி ஆகியவற்றை இலக்காக கொண்ட ஒற்றுமை அரசாங்கத்தின் கொள்கையை மக்களிடம் சேர்ப்பதற்காக இறுதி நிமிடம் வரை நான் பிரசாரம் செய்வோன் என்றார் அவர்.

பாரிசான் நேஷனல் மற்றும் மஇகாவின் ஆதரவுக் கட்சியான ஐ.பி.எஃப். ஏற்பாட்டில் நேற்று இங்கு நடைபெற்ற ஒற்றுமை பரப்புரை நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு சொன்னார்.

இதனிடையே, இந்நிகழ்வில் உரையாற்றிய ஐ.பி.எஃப். தலைவர் டத்தோ டி. லோகநாதன், கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் கோல குபு தொகுதியில் தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருவதாகக் கூறினார்.

இந்த தொகுதியில் 700க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். வீடு வீடாகச் சென்று




பிரசாரம் செய்யும் அதே வேளையில் சிறிய அளவில் கூட்டங்களையும் நடத்தி வருகிறோம் என்றார் அவர்.

இந்த பிரசார கூட்டத்திற்கு வேட்பாளர் நேரில் வருகை புரிந்தது எங்களுக்கு கூடுதல் பலமாக அமைந்துள்ளது. வேட்பாளர் இல்லாத பட்சத்திலும் எங்களின் பிரசாரம் தொடரும் என அவர் சொன்னார்.

# இந்தியர்கள் ஓட்டளிக்க வரவேண்டாமா?

**கோலாலம்பூர்-**

கோலக் குபு பாருவில் இப்பொழுது நடக்க உள்ள இடைத்தேர்தலில் இந்தியர்கள் வாக்களிக்க கூடாது என சிலர் பிரச்சாரம் செய்கிறார்கள். ஒருவர் தான் சார்ந்துள்ள கட்சிக்கு ஓட்டு கேட்பது இயல்பு. ஆனால் எவருக்கும் ஓட்டுப் போடாதீர்கள் கூறுவதில்லை, அப்படி கூறினால், அதில் உள்ள மர்மம் என்ன?

பக்காத்தான் வெற்றிக்கு தொகுதியிலுள்ள 30% சீனர்களும், 18% இந்தியர்களும் சிறு எண்ணிக்கையில் மலாய்க்காரர்கள் ஒன்று சேர்ந்து வாக்களிக்க வேண்டும் என்பது தெரிந்ததே !

ஆக, இந்தியர்கள் ஓட்டு போடாவிட்டால் பெரிக்காத்தான் நேஷனலின் வெற்றி எளிதாகிவிடும் என்பது அவர்கள் கணக்கு, அவர்கள் ஆடும் கபட நாடகத்தை புரிந்து கொள்ள முடியாதவர்களா இந்தியர்கள் ?

இத்தொகுதியில் இந்தியர்கள் சீனர்களுடன் ஒன்று சேர்ந்து போராடினால் மட்டுமே பக்காத்தானுக்கு வெற்றி.

ஆனால், பெரிக்காத்தான் நேஷனல், தொகுதியில் 50 விழுக்காடாக உள்ள மலாய் வாக்காளர்கள் அனைவரின் ஓட்டுகளையும் பெற்றால் வெற்றி அவர்களுக்கே! ஆக, இந்தியர்களை ஓட்டு போடாதீர்கள் என்பவர்கள் பெரிக்காத்தான் நேஷனல் வெற்றிக்கு பாடுபடுகிறார்கள்!

## இந்தியர்களை செல்லா காசாக்கும் திட்டம்?

இந்தியர்கள் , சீனர்கள் ஓட்டு இன்றி பெரிக்காத்தான் நேஷனல் வெற்றி பெற்றால், எதிர்காலத்தில் இந்தியர்கள் ஓட்டு தேவையில்லை என்று துணிந்து மார்த்தட்ட மாட்டார, கெடா மாநில மந்திரி புசார் சனுசி?

பெரிக்காத்தான் நேஷனல் தேர்தல் இயக்குனர் சனுசிக்கு வெற்றி மாலையை சூட்டுவார்களா இந்தியர்கள்?

ஆக, இந்த நாட்டு இந்தியர்களை, அரசியலில் செல்லா காசாக்க ஆசை படுகிறதா தேர்தலை புறக்கணிக்க கூப்பாடு போடும் கூட்டம்.

## பெரிக்காத்தான் ஏன் இந்தியர் அல்லது சீனரை வேட்பாளராக்கவில்லை?

பாரிசான் நேசனல் மற்றும் பக்காத்தான் ஹராப்பான் கால-காலமாக ஒரு சீன அல்லது இந்தியரை மட்டும் வேட்பாளர்களராக்கி வந்த கோல குபு சட்டமன்ற தொகுதியில் பெரிக்காத்தான் நேஷனல் ஒரு மலாய் வேட்பாளரை நிறுத்தியுள்ளது. அவர் வெற்றிப் பெற்றால் இனிவரும் காலங்களில் மலேசிய அரசியல் வானில் இந்தியர்கள் ஓரங்கட்டப் படுவது தவிர்க்க முடியாத நிகழ்வாகி விடும் என்பது சிலாங்கூர் இன்றுவின் எச்சரிக்கை.

## வஞ்சகர்கள் மூஞ்சியில் காறியுமிழ வேண்டும்

அரசியல் அதிகாரமற்ற இந்திய சமுதாயத்திற்கு உரிமைகள் தங்க தட்டிலா கிடைக்கும்? அதன் பின் ஆலயங்களின் நிலை, தமிழ்ப்பள்ளிகளின் நிலை நம் பிள்ளைகளின் எதிர்காலம் என்ன ஆகும்? எப்படியிருக்கும்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தேவைதான இந்தியர்களுக்கு இப்படியான ஒரு அவல நிலை. இந்தியர்களை அரசியலில் பூஜியமாக்க துடிக்கும் வஞ்சகர்கள் மூஞ்சியில் காறியுமிழ வேண்டாமா நமது தாய்மார்கள்?

## விளக்கெண்ணெய் தலைவர்களின் சாயம் வெளுத்து விடுமா?

இந்தியர்களை பெரிக்காத்தான் நேஷனல் கட்சிக்கு ஓட்டு போடுங்கள் என்றால் இந்த விளக்கெண்ணெய் தலைவர்களின் சாயம் வெளுத்து விடும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

ஏன் அவர்கள் மனதார ஆதரிக்கும் PN பெரிக்காத்தான் கட்சிக்கு ஓட்டு கேட்க வில்லை? ஏன் PN கட்சிக்கு நேரடியாக ஆதரவு கேட்கவில்லை என்பதில்தான் சூது ஒளிந்துள்ளது,

அவர்கள் ஆதரிக்கும் பெரிக்காத்தான் நேஷனல் கட்சி, நாட்டிலும், மாநிலங்களில் ஆட்சியில் இருந்தது,

ஆனால், சாதனை என சொல்லிக் கொள்ள எதுவுமில்லை. அந்த மாநிலங்களின் லட்சக்கணக்கான மக்களுக்கு உண்ண உணவு மட்டுமல்ல பொழப்பு கூட பக்கத்தான் மாநிலங்களில் தான் நடக்கிறது என்பதுதான் வேதனையான உண்மை.

## 37 ஆயிரத்துக்கு மேற்பட்ட உயிர்கள் பலி

பெரிக்காத்தான் நேஷனல் தலைவர்கள் நாட்டில் அவசர காலத்தை பிரகடனப் படுத்தி நாடாளுமன்றம், சட்டமன்ற செயல் பாடுகளை தடுத்து நிறுத்தினார்கள் !

பெரிக்காத்தான் நேஷனல் கட்சி, நாட்டில் ஆட்சியில் இருந்தது, அப்பொழுது நாட்டிலிருந்த அந்நிய முதலீட்டாளர்கள் ஓட்டம் பிடித்தனர். தொழிற்சாலைகள், வியாபாரங்கள் மூடப்பட்டது. இளைஞர்கள் வேலை இழந்தனர். தனிமனித கடன் பெருகியது. சேமிப்புகள் அனைத்தும் பயன்படுத்தப் பட்டது. நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. மக்கள் உணவுக்கு வெள்ளைக் கொடி ஏந்தினார்கள் .

37 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்களை பலியிட்டனர். உயிர்காக்கும் ஊசி மருந்து கூட இல்லை, பல ஆயிரம் உயிர் பலியான பின் ஊசி வந்தது, அதிலும் கொள்ளை. ஊழல், அமைச்சர்கள் அவர் பிள்ளைகள் , மருமகன்கள் எனப் பலரும் நாட்டின் வளத்தை சுரண்டினர், அரசு உதவி மானியம் பெற்ற அத்தியவாசிய பொருட்களை கூட அன்னிய நாட்டுக்கு கடத்தினர்கள், கொள்ளையிட்டனர் அமைச்சரின் பிள்ளைகள். இப்பொழுது நீதி விசாரணைக்கு பயந்து நாட்டை விட்டு ஓடுகின்றனர்.

## தலைமறைவாக வாழ்கிறார்கள்.

நாட்டின் ஒரு பகுதியை அந்நியரிடம் இழந்தனர். இன்று, அவர்களிடமிருந்து அனைத்துக்கும் சரியான விடை இல்லை. இந்த நிலை தொடர்ந்தால் நாட்டின் கட்டமைப்பு முற்றாக சீரழியும். நாடு திவாலாகும். நிலை.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்து மக்களை பரிதவிக்க விட்டனர்.

## நாட்டை ஒன்றுபடுத்தி மேம்படுத்த போராடும் அன்வார்

நாட்டைக் காக்க, மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த, பொருளாதாரத்தை மீட்டெடுக்க, ஏற்படுத்தப்பட்ட அரசுதான் பக்காத்தான் ஹராப்பான்.

அன்வார் இப்ராஹிம் தலைமையில் நிறுவிய இந்த ஒற்றுமை அரசு. வெளியேறும் முதலீட்டைத் தடுத்து நிறுத்தி, மீண்டும் நாட்டிற்குள் வெளி முதலீடுகளை கொண்டு வருவதிலும் அனைவருக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கவும், நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தவும், உணவு விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசிய பொருட்கள் அனைவருக்கும் கிடைக்கவும், நாட்டில் கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியுடன் மக்களாட்சி முறை தொடர.

மக்கள் வாழ்வு மீண்டும் இயல்பான பழைய நிலைக்குக் கொண்டு வர பாடுபடும் அரசு பக்காத்தான் என்பதை நாம் உணர வேண்டும்.

# இந்திய சமூகத்திற்கு எதுவும் செய்யவில்லையா?

**கோலாலம்பூர்-**
இந்நாட்டிலுள்ள இந்திய சமூகத்திற்கு மடாணி அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை தவிடுபொடியாக்கும் வகையில் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இந்திய சமூகத்தின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள நான்கு முன்னணி தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியில், இந்திய சமூகத்தை மடாணி அரசாங்கம் ஒருபோதும் புறக்கணித்ததில்லை எனத் திட்டவட்டமாகக் கூறிய அவர், இந்தியர்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகக் கூறினார்.

எந்த தரப்பையும் புறந்தள்ளாமல் சமூகத்தின் அனைத்து நிலையிலான மக்களுக்கும் உதவுவதற்கான அணுகு முறையை மடாணி அரசாங்கம் கடைபிடிக்கிறது என்றார் அவர்.



### குடியுரிமை
மலேசியாவில் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கு கூட இன்னும் குடியுரிமை கிடைக்கவில்லை. இப்பிரச்சனைக்குத் தீர்வு காண நாங்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறோம். முதன் முறையாக இப்போது அதிக எண்ணிக்கையிலான குடியுரிமை பிரச்சனைகளுக்கு உள்துறை அமைச்சு தீர்வு கண்டுள்ளது என அவர் சொன்னார்.

### மித்ரா
இந்திய சமூகத்தில் சமூக பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பான மலேசிய இந்திய சமூக உருமாற்றப் பிரிவுக்கு (மித்ரா) அரசாங்கம் ஆண்டு தோறும் 10 கோடி வெள்ளியை வழங்கி வருகிறது.

இந்த மித்ரா நிதியின் கீழ் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு தொழில்திறன் பயிற்சி, உயர் கல்வி கட்டண உதவி போன்ற கல்வித் திட்டங்களுக்கும் விவசாயம் மற்றும் கிக் பொருளாதாரத் துறை உள்ளிட்ட தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதோடு மட்டுமின்றி, இந்திய சமூகத்தைக் குறிப்பாக பி40 தரப்பினரை இலக்காகக் கொண்டு சமூகவியல் மற்றும் சமூக நலத் திட்டங்களும் கலை, கலாசாரம், மொழி, விளையாட்டு போன்ற நடவடிக்கைளும் மித்ரா மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### தெக்குன்
இது தவிர, தெக்குன் எனப்படும் தொழில்முனைவோர் பொருளாதார மேம்பாட்டு நிதியின் கீழ் இந்திய தொழில் முனைவோருக்காக 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 3 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தெக்குன் திட்டத்தின் கீழ் ஸ்புமி எனப்படும் இந்திய சமூக தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியப் பெண் தொழில் முனைவோர் எளிதான முறையிலும் விரைவாகவும் சிறுதொழில் கடனுதவிகளைப் பெறுவதற்கு இந்த திட்டம் வழி வகுக்கிறது.

### ஸ்புமி கோஸ் பிக்
'ஸ்புமி கோஸ் பிக்' எனும் ஸ்புமி திறன் கடன் உதவித் திட்டத்திற்கு மேலும் 3 கோடி வெள்ளியை தெக்குன் ஒதுக்கியுள்ளது.

### அமானா இக்தியார் மலேசியா
மேலும், இந்திய பெண் தொழில்முனைவோருக்கு ஆக்கத் திறனளிப்பதற்காக 5 கோடி வெள்ளி நிதித் திட்டம் அமானா இக்தியார் மலேசியா மூலம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய கடனுதவித் திட்டங்கள் வாயிலாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய தொழில் முனைவோர் தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### பெட்ரோனாஸ் உபகாரச் சம்பளம்
அரசு சார்பு நிறுவனமான பெட்ரோனாஸ் மூலம் இந்திய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. அந்நிறுவனத்தில் சுமார் 1,000 இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த விஷயம் விளம்பரப்படுத்தப் படாததால் யாருக்கும் தெரியாமல் போனது என அன்வார் அப்பேட்டியில் குறிப்பிட்டார்.

அரசாங்கம் இந்திய சமூகத்திற்கு உதவி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை வன்மையாக மறுத்த பிரதமர், சுயநலமும் பணபலமும் கொண்ட தரப்பினர் இந்திய சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி தவறாக வழி நடத்துகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

எங்களுக்கு இதுவரை எதுவும் கிடைக்கவில்லை எனக் கூறாதீர்கள். கடந்த ஆண்டுகளில் பூமிபுத்ராக்களுக்கு நாம் அதிகமாக வழங்கியுள்ளோம். அதே சமயம் இந்திய சமூகத்திற்கும் அதிகமாக வழங்குகிறோம் என்றார் அவர்.

பராமரிப்பு பணிகளுக்காகத் தமிழ், சீனப் பள்ளிகள் உட்பட நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் கல்வி அமைச்சின் வாயிலாக அரசாங்கம் தொடர்ந்து மானியங்களை வழங்கி வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மத்திய அரசின் வருமானம் 31,200 கோடி வெள்ளியாக அதிகரிக்கும்

**கோலாலம்பூர்-**
இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் வரி நடவடிக்கைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டதன் அடிப்படையில் வரியின் மூலம் கிடைக்கும் அதிகப்படியான வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் வாயிலாக 2024ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வருமானம் 31 ஆயிரத்து 219 கோடியே 90 லட்சம் வெள்ளியாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் மிகப்பெரிய பங்களிப்பை அதாவது மொத்த வருமானத்தில் 79.5 விழுக்காடு தொகையை வழங்கும் வேளையில் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.57 விழுக்காடாகவும் இருக்கும் என்று துணை நிதியமைச்சர் லிம் ஹூய் யிங் கூறினார்.

வரி அல்லாத வருமானம் 20.5 விழுக்காடாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.24 விழுக்காடாக இருக்கும் என்று மக்களவையில் இன்று அவர் சொன்னார்.

வலுவான பொருளாதார வளர்ச்சி, வரி அடிப்படையை விரிவுபடுத்துதல், மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல், வரி வருமான அடித்தளத்தை பெருக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகியவை கூடுதலாக வருமான ஈட்டும் முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும் என்று அவர் சொன்னார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு நாட்டின் வரி வசூலிப்பு கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்வதற்கான சாத்தியம் உள்ளதா என பாரிட் உறுப்பினர் முகமது இஸ்மி மாட் தாயிப் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் வருமான வளங்களை பல்வகைப் படுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் அரசாங்கம் கடப்பாடு கொண்டுள்ளதோடு அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank**
**Rakat, No1 Jalan Indah**
**14/8, Seksyen**
**14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*



# பக்காத்தான் தொடர்ந்து வலுப்பெறுகிறது

**ஷா ஆலம்-**

பக்காத்தான் ஹராப்பான் கூட்டணியின் தற்போதைய நிலை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட அனைத்து தரப்பினரின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது என்று மாநில ஹராப்பான் கூட்டணியின் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

அண்மையில் பெர்சத்து கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் எனது தலைமையிலான மாநில அரசு நிர்வாகத்திற்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளதானது மாநில அரசின் ஆற்றலை நிரூபிக்கிறது என்று மந்திரி புசாருமான அவர் சொன்னார்.

மாநிலத் தேர்தல் பிரசாரத்தின் இரண்டாவது நாளின் போது 33 இடங்களைக் கைப்பற்ற முடியும் என்று நான் நம்பிக்கைத் தெரிவித்திருந்தேன். அத்தேர்தலில் நமக்கு 34 இடங்கள் கிடைத்தன. புதிதாக உறுப்பினர் ஒருவர் நம்முடன் இணைந்துள்ளதால் நமது உறுப்பினர்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

நாம் கையாள வேண்டிய மற்றும் தீர்வு காண வேண்டிய பல விஷங்கள் இன்னும் இருந்தாலும் அரசியல் மற்றும் மக்கள் நம்பிக்கையைப் பொறுத்த வரை ஏற்ற இறக்கங்கள் நிச்சயம் இருக்கும். இருப்பினும் நாம் மக்களின் நம்பிக்கையைப் பெறுவோம் என்று நேற்று இங்கு கெஅடிலான் தகவல் மாநாட்டை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், டான்ஸ்ரீ மொஹிடின் யாசின் மற்றும் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப்பை விட டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அதிக நம்பிக்கையைப் பெற்ற தலைவராக விளங்குகிறார் என்று அவர் சொன்னார்.

கடந்த 2021ஆம் ஆண்டு மொஹிடின் 50 விழுக்காட்டிற்கும் குறைவான ஆதரவைப் பெற்றிருந்தார். அம்னோ தனது ஆதரவை மீட்டுக் கொண்டப் பின்னர் அந்த ஆதரவையும் அவர் இழந்தார்.

பதினான்கு மாதங்கள் ஆட்சியில் இருந்த இஸ்மாயில் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறியதற்காக 10,000 வெள்ளி அபராதம் விதிக்கப்பட்டார். அவர் ஒருபோதும் 50 விழுக்காட்டு மக்கள் ஆதரவைப் பெற்றதில்லை. நடப்பு பிரதமரின் ஆட்சி நிலையற்றது எனக் கூறப்பட்டாலும் மக்களின் 50 விழுக்காட்டு ஆதரவைப் பெற்றுள்ளார் என்றார் அவர்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மாநிலப் பெரிக்கத்தான் தலைவர்கள் தொடர்ந்து மௌனம் சாதித்து வருவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் செலாட் கிள்ளான் உறுப்பினர் அப்துல் ரஷிட் அசாரி மந்திரி புசார் தலைமைத்துவதற்கு ஆதரவு தருவதாக அறிவித்தார்.

# புதிய பள்ளித் தவணை ஜனவரியில் தொடங்கும்



**ஜோகூர் பாரு-**

வரும் 2026ஆம் ஆண்டில் புதிய பள்ளித் தவணையை ஜனவரி மாதத்திற்கு மறுபடியும் மாற்றும் திட்டத்தால் இவ்வாண்டு பள்ளி பாடத்திட்டங்களில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

ஆகவே, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பள்ளித் தவணை மறுசீரமைப்பு குறித்து பெற்றோர்கள் கவலையடையத் தேவையில்லை என்று கல்வித் துறை தலைமை இயக்குநர் அஸ்மான் அட்னான் கூறினார்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான பள்ளித் தவணையை மறுபடியும் அமல்படுத்துவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்படும் சீரமைப்பு பாடத் திட்டத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

இந்த திட்டத்தை நாங்கள் வழக்கம் போல் அமல்படுத்துவோம். தவணை விடுமுறையில் மட்டும் சிறிது மாற்றம் இருக்கும். அதாவது பள்ளி விடுமுறை காலம் குறைக்கப்படும் என்று இங்குள்ள சுல்தான் இஸ்மாயில் தேசிய பள்ளிக்கு வருகை புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

வரும் 2026ஆம் ஆண்டில் பள்ளித் தவணை ஜனவரி மாதத்திற்கு மாற்றம் செய்யப்படவுள்ளதால் இவ்வாண்டு பள்ளிகளில் பாடங்கள் மிகவும் அடர்த்தியான அட்டவணைகளைக் கொண்டிருக்குமா என்ற நிருபர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

பள்ளித் தவணை பழைய நிலைக்குத் திரும்பினால் பள்ளி நாட்கள் எண்ணிக்கை முன்புபோல் 190 நாட்களாக இருப்பது உறுதி செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பள்ளிகளில் கல்வித் தவணை வரும் 2026ஆம் ஆண்டு தொடங்கி ஜனவரி மாதத்தில் தொடங்கும் என்று கல்வியமைச்சர் ஃபாட்லினா சீடேக் முன்னதாக கூறியிருந்தார்.

# வேலைவாய்ப்பு மோசடிக் குற்றங்கள் முக்கியமாக விவாதிக்கப்படும்

**கோலாலம்பூர்-**

எதிர்வரும் 2025 ஆசியான் உச்சநிலை மாநாட்டின் போது வலியுறுத்தப்படும் 10 முக்கிய நிகழ்ச்சி நிரல்களில் வேலைவாய்ப்பு மோசடி குற்றமும் இடம்பெறும்.

வேலைவாய்ப்பு மோசடிக் குற்றங்கள் உலகலாவியபிரச்சனையாகஉருவெடுத்துள்ளதால் இவ்விவகாரத்தை முக்கிய நிகழ்ச்சி நிரலில் கொண்டு வர உச்சநிலை மாநாட்டின் தலைவர் என்ற முறையில் மலேசியா முடிவு செய்ததாக உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் கூறினார்.

அடுத்தாண்டு நாங்கள் தலைமை தாங்கும் ஆசியான் உச்சநிலை மாநாட்டில் இந்தத் தலைப்பை சேர்ப்பதில் மிகவும் முன்னோக்கிச் சிந்திக்கும் ஆசியான் நாடாக நாங்கள் விளங்குகிறோம். இந்த மாநாட்டில் இடம்பெற்ற 10 முதன்மை நிகழ்ச்சி நிரல்களில் ஒன்றாக வேலைவாய்ப்பு மோசடி என்ற தலைப்பைச் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்தவர்கள் நாங்கள்தான் என அவர் சொன்னார்.

இந்த வகையான குற்றங்களை மோசடி மற்றும் குற்றங்கள் என்று ஐ.நா.வின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் என்று முன்பு வகைப்படுத்தி இருந்தது. ஆனால் இப்போது இந்த குற்றத்தை மனித கடத்தல் குற்றமாக அது அங்கீகரித்துள்ளது. எனவே, இதனை நாம் மட்டும் அல்ல, பிராந்திய மற்றும் உலகளாவிய நாடுகளும் நெருக்கடியாக பார்க்கின்றன என்று அவர் இன்று மேலவையில் கேள்வி பதில் அமர்வின் அவர் போது கூறினார்.

வேலைவாய்ப்பு மோசடியால் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர் மோசடி பிரச்சனையை மிகவும் திறம்பட கையாள்வதற்கான அரசாங்கத்தின் செயல் திட்டம் குறித்து செனட்டர் ரீட்டா சரிமா அனாக் பெட்ரிக் இன்சோல் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 2021 செப்டம்பர் முதல் இதுவரை 470 பாதிக்கப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு மோசடி தொடர்பாக 362 புகார்கள் பெறப்பட்டுள்ளது காவல்துறையின் தரவுகள் காட்டுகின்றன என்றார் அவர்.

பாதிக்கப்பட்ட 470 பேரில் 331 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 139 பேர் இன்னும் சம்பந்தப்பட்ட நாடுகளில் சிக்கித் தவிப்பதாக வகைப்படுப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

# சாரா திட்டத்திற்கு – RM210 மில்லியன்செலவிட்டுள்ளது

**ஷா ஆலம்-**

ரஹ்மா அடிப்படை நன்கொடை (சாரா) திட்டத்தை வெற்றிகரமாக ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு மற்றும் தீவிர ஏழைகளுக்கு விநியோகிக்க அரசாங்கம் இதுவரை RM210 மில்லியன் செலவிட்டுள்ளது.

குடும்பத்தார்களுக்கு வழங்கும் உதவியின் மதிப்பு RM600 இலிருந்து RM1,200ஆக அதாவது இரு மடங்காக உயர்ந்துள்ளது, அதே சமயம் தனிநபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக RM600 வழங்கப்படுகிறது என துணை நிதியமைச்சர் கூறினார்.

இன்றைய மக்களவையில் ஜெலி உறுப்பினர் ஜஹாரியின் கேள்விக்குப் பதிலளித்த அவர், 700,000 மக்களின் நலனுக்காக இந்த திட்டத்தை செயல்படுத்த 700 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மானியத் திட்டத்தின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக கடந்த ஆண்டு 210,000 பெறுநர்களுக்கு RM130 மில்லியன் வழங்கப்பட்டதை ஒப்பிடும்போது தற்போது அத்தொகை ஐந்து மடங்கு அதிகமாக அதிகரித்துள்ளது என்று அவர் மேலும் விளக்கினார்.

தீபகற்பத்தில் உள்ள பெறுநர்களுக்கு, உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது, இது குடும்பங்கள் மற்றும் வாழ்க்கைத் துணை இல்லாத முதியவர்களுக்கு RM100, அதே சமயம் தனிநபர்களுக்கு மாதத்திற்கு RM50ஆகவும் வழங்கப்படுகிறது.

சபா, சரவாக் மற்றும் லாபுவானில் உள்ள பயனாளிகள் வருடத்திற்கு இரண்டு முறை இந்த உதவி பெறுகிறார்கள், அதாவது RM600 துணை இல்லாதவர்கள் வயதானவர்கள் மற்றும் தனி நபர்கள் RM300 பெறுகிறார்கள்.



# மக்களை அணுகுவதற்கான தளமாக மடாணி பொது உபசரிப்பு விளங்குகிறது

**மலாக்கா-**

பல்வேறு நிலைகளில் குறிப்பாக மாநில அளவில் நடத்தப்படும் அய்டில்பித்ரி மடாணி நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பு நிகழ்வுகள், அண்மைய காலமாக மக்கள் எழுப்பி வரும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணக்கூடிய மற்றும் நாட்டிலுள்ள பல்லின மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக அமையும்.

ஆறு மாநிலங்களில் நடைபெறவிருக்கும் மடாணி நோன்புப் பெருநாள் பொது உபசரிப்புகளில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கலந்து கொள்வார் என்று பிரதமரின் மூத்த அரசியல் செயலாளர் டத்தோஸ்ரீ சம்சுல் இஸ்கந்தார் அக்கின் கூறினார்.

மக்களை பிரதமர் அணுகுவதற்கான தளமாக மட்டுமின்றி எதிர்க்கட்சியினரும் பொறுப்பற்றத் தரப்பினரும் பரப்பி வரும் தவறான தகவல்களால் பொது மக்கள் கவரப்படாமலிருக்க நடப்பு விவகாரங்கள் குறித்து விளக்கங்களை வழங்குவதற்கும் இந்த நிகழ்வு வாய்ப்பாக அமையும் என்று அவர் சொன்னார்.

அய்டில்பித்ரி மடாணி நிகழ்வை ஜோகூர், சபா, மலாக்கா, திரங்கானு, கிளந்தான், கெடா ஆகிய ஆறு மாநிலங்கள் ஏற்பாடு செய்துள்ள வேளையில் அதன் நிறைவு விழா பினாங்கில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மாநிலங்களில் உள்ள துறைத் தலைவர்களைச் சந்தித்து விளக்கங்களைப் பெறுவது மற்றும் முக்கியமான மற்றும் மத்திய அரசின் உதவி தேவைப்படக்கூடிய திட்டங்கள் குறித்து விவாதிப்பது ஆகியவையும் பிரதமரின் இந்த மாநிலப் பயணத்திற்கான நோக்கங்களில் ஒன்றாக விளங்குகிறது என்றார் அவர்.

# அதிக வரியை வருமான வரி வாரியம் வசூலிக்க வேண்டும்

**வரி வாரியம் வசூலிக்க வேண்டும்-**

உள்நாட்டு வருமான வரி வாரியம் இவ்வாண்டிற்கு நிர்ணயித்த 19,700 கோடி வெள்ளி வரியை விட அதிகத் தொகையை வசூலிக்க முடியும் பிரதமர் என்று டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நம்பிக்கைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 18,334 கோடி வெள்ளி வரியை வசூலித்து உள்நாட்டு வருமான வரி வாரியம் சாதனைப் படைத்ததாக நிதியமைச்சருமான அவர் சொன்னார்.

கடந்த 2022ஆம் ஆண்டின் மொத்த வசூலைக் காட்டிலும் இது 780 கோடி வெள்ளி அல்லது 4.49 சதவீதம் அதிகமாகும் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இதர அண்டை நாடுகளான சிங்கப்பூர் (12.6 சதவீதம்) மற்றும் தாய்லாந்து (16.4 சதவீதம்) ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது மலேசியா இன்னும் குறைந்த வரி அடிப்படையை அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 11.2 விழுக்காட்டை மட்டுமே கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவில் உள்ள பதிவுசெய்யப்பட்ட 15 லட்சம் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் வரி செலுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை இன்னும் குறைவாக அதாவது சுமார் 435,000ஆக மட்டுமே உள்ளது என்றார் அவர்.

கடத்தாண்டு டிசம்பர் 31 வரை வரி செலுத்துப் தனிநபர்களின் எண்ணிக்கை 57 லட்சம் பேராகவும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டத் தொகை 4,096 கோடி வெள்ளியாகவும் இருந்ததாகக் கூறிய அவர், அதேசமயம் 539,113 நிறுவனங்களிடமிருந்து 9,877 கோடி வெள்ளி வரியாக வசூலிக்கப்பட்டது என்றார்.

உள்நாட்டு வருமான வரி வாரியம் எடுத்த நடவடிக்கைகள் நாட்டின் வருவாயை அதிகரிப்பதில் வெற்றி பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை என்றும் அன்வார் சொன்னார்.

# நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மக்களால் உணர முடியும்

**கோலாலம்பூர்-**

பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக அதிக மதிப்புள்ள முதலீடுகளை பெற்றதன் வழி, நாட்டின் திறனை மலேசியர்கள் உணர்ந்து கொள்ள முடியும். அரசாங்கத்தின் திறனை உணரும் ஆற்றல் மலேசியர்களுக்கு உண்டு என்பதில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நம்பிக்கை கொண்டுள்ளார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) முகநூல் பக்கத்தில் இருந்து சர்வதேச ரீதியில் செமிகொண்டக்டர் தயாரிப்பில் மலேசியாவின் வளர்ந்து வரும் பொருளாதார சாத்தியக்கூறுகள் குறித்து வீடியோ அறிக்கையைப் பகிர்ந்து கொண்ட அவர், புதிய, உயர் தொழில்நுட்பம் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை புதுமையாக்க மடாணி அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றார்.

"உலகளாவிய நிறுவனங்களின் மதிப்புமிக்க முதலீடுகள், அதிகமான மலேசியர்களுக்கு அதிக ஊதியம் தரும் வேலைகளை உருவாக்குகிறது.

"நமது பொருளாதாரம் மற்றும் இந்த தேசத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்கு, மேம்பாட்டுக்கும் பங்களிக்கும், மலேசியர்களின் ஆற்றலிலும் திறனிலும் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது" என்று பிரதமர் அன்வார் தனது பேஸ்புக் கணக்கில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 12.8 பில்லியன் அமெரிக்க டாலர் (அமெரிக்க $1 = RM4.76) மதிப்புள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) பெற்றதன் வழி, மலேசியா, குறிப்பாக பினாங்கு, ஒரு புதிய செமிகொண்டக்டர் மையமாக உருவாகி வருவதாக உலகப் பொருளாதார மன்றத்தின் வீடியோ அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

# மகளிர் மேம்பாடுகளை இரட்டிப்பாக்க வேண்டும்

**பெட்டாலிங் ஜெயா-**

பெண்கள், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் டத்தோஸ்ரீ நான்சி சுக்ரி, மகளிர் மேம்பாடுகள் இரட்டிப்பாக்க வேண்டும் என்று விரும்புகிறார், அதனால் அவர்கள் பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்வதில் பின்தங்கி இருக்க மாட்டார்கள் என்கிறார்.

பல பெண்கள் தங்கள் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வேலையை விட்டு விடுவதா அல்லது தொழிலை தொடர்வதா என்ற குழப்பத்தை எதிர்கொள்கிறார்கள்.

"பல்கலைக்கழகங்களில் ஆண்களை விட பெண்கள் ஆதிக்கம் அதிகம், 81.9 சதவீதம், ஆனால் தொழிலில் ஆண்களுடன் ஒப்பிடுகையில், மக்கள் தொகையில் பெண்கள் 56.2 சதவீதம் பேர் மட்டுமே பணிபுரிகின்றனர்.

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம் 2024 இல் தனது உரையின் போது, "30 முதல் 39 வயதுக்கு உட்பட்ட பெண்கள் குடும்ப பொறுப்புகள் காரணமாக நிரந்தரமாக தங்கள் வேலையை விட்டு விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம்" என்று கூறினார்.

நான்சி மேலும் கூறுகையில், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள், பொருளாதார பாதுகாப்பு வலைகள் இல்லாததால், அரசாங்கத்திடம் இருந்து நிதி உதவி பெறுபவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

மக்களின் பணத்தைப் பாதுகாத்து அதனை அவர்களின் பரஸ்பர நலனுக்காகத் திருப்பிக் கொடுப்பதே முக்கியமானதாகும் எனவும் அவர் கூறினார்.

ஊழலுக்கு எதிராகப் போராடுவது எம்.ஏ.சி. சி.யின் வேலை மட்டும் அல்ல. ஊழல் புகார்கள் குறித்து கேள்விப்பட்டால் உடனே புகார் செய்யுங்கள். ஆனால் பொய்ப்புகார்கள் செய்யாதீர்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அமலாக்க நிறுவனங்களை அரசு கண்காணித்து வருகிறது

**புத்ராஜெயா-**

ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக மோசடிகளைத் தடுக்கும் வகையில் அமலாக்க நிறுவனங்களை அரசாங்கம் அணுக்கமாக கண்காணித்து வருகிறது என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் கூறினார்.

இத்தகைய கண்காணிப்பு நடவடிக்கைகளின் வாயிலாக நாட்டின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொறுப்பினை ஏற்றுள்ள அரசு ஊழியர்கள் மத்தியில் ஊழல் போன்ற தவறான செயல்கள் நிகழ்வதைத் தடுக்க முடியும் என்று அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

இது சுங்கத் துறை, உள்நாட்டு வருமான வரி வாரியம் மற்றும் குடிநுழைவுத் துறைக்கு விடுக்கப்படும் ஒரு நினைவூட்டலாகும். நாங்கள் அணுக்கமாக கண்காணித்து வருகிறோம். மோசடி தொடர்பான புகார்களைத் தவிர்க்க இயலும் என நம்புகிறேன் என்று அவர் சொன்னார்.

சுங்கத் துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஊழல் புகார்கள் அரசு ஊழியர்களின் தோற்றத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தி விடக் கூடாது. காரணம் அத்துறையிலுள்ள சிறிய எண்ணிக்கையிலான அதிகாரிகளே இத்தகைய செயல்களைப் புரிந்துள்ளனர் என்றார் அவர்.

எதிர்மறையான விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மற்றும் பணியிட மாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்த சுங்கத் துறையின் தலைமை இயக்குநரை (டத்தோ அனிஸ் ரிசானா முகமது ஜைனுடின்) நான் பாராட்டுகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 'டத்தோ' விருதுகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க சட்டம்

**கோலாலம்பூர்-**

நடப்பிலுள்ள 2017 ஆம் ஆண்டு விருதளிப்பு சட்டத்தின் (சட்டம் 787) சில ஷரத்துகளில் திருத்தங்களைச் செய்வதற்கான பரிந்துரையை மலேசிய டத்தோக்கள் மன்றம் (எம்.டி.டி.எம்.) சட்டத் துறை அலுவலகம் மற்றும் பிரதமர் துறை அமைச்சிடம் (சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்) சமர்ப்பித்துள்ளது.

உயரிய விருதுகள் மற்றும் பட்டங்கள் தொடர்பான விவகாரத்தில் முறைகேடுகள் நிகழ்வதை தடுப்பதற்கு ஏதுவாக சட்ட அமலாக்கம் மேலும் பயனுள்ளதாகவும் ஆக்ககரமான தாகவும் ஆக்கும் நோக்கில் இந்த பரிந்துரை முன்வைக்கப் பட்டுள்ளதாக எம்.டி.டி. எம் தலைவர் டத்தோ அவாலான் அஜிஸ் கூறினார்.

உயரிய விருதுகள் பட்டங்களைத் தவறாக பயன்படுத்துவோர் கைது செய்து அவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகையை திறக்கும் அதிகாரத்தை போலீசாருக்கு வழங்குவது மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக இவ்விவகாரதைச் சட்டத் துறைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுச் செல்வது உள்ளிட்ட அம்சங்களை அந்த உத்தேச சட்டத் திருத்தப் பரிந்துரை கொண்டுள்ளதாக அவர் சொன்னார்.

இத்தகைய குற்றங்களைப் புரிவோரை போலீசார் கைது செய்ய முடியுமா என்பது குறித்து தற்போதையச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

போலி விருதுகளை வைத்திருப்போர் சம்பந்தப்பட்ட மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் அதிகமானப் புகார்கள் பொது மக்களிடமிருந்து கிடைத்து வருவதால் உரிய விருதுகள் மற்றும் பட்டங்கள் துஷ்பிரயோகம் தொடர்பான விவகாரத்தை தாங்கள் கடுமையாக கருதுவதாக அவர் தெரிவித்தார்.



# துணை அமைச்சராகப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவு

**புத்ராஜெயா-**

தொழில்முனைவோர் கூட்டுறவு மேம்பாட்டு துறை துணை அமைச்சராக பதவியேற்று 100 நாட்கள் பூர்த்தியான நிலையில் நாடு மற்றும் மக்களின் பொருளாதார நிலையை மேலும் வலுப் பெறச் செய்வதை தமது பிரதான இலக்காகக் கொண்டு டத்தோ ஆர்.ரமணன் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமின் கனவையும் இலக்கையும் வெற்றி பெறச் செய்யும் முயற்சியாக பொருளாதாரத்தை வலுப்படுத்த தாம் எண்ணம் கொண்டுள்ளதாக ரமணன் கூறினார்.

இந்த அளப்பரிய பணியில் தாம் மட்டுமல்லாத கூட்டுறவு மேம்பாட்டு துறை அமைச்சர் டத்தோ இவோன் பெனடிக்கும் முழு பங்களிப்பை வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

இந்த 100 நாள் பயணம் எனக்கு அமைச்சில் பல்வேறு அனுபவங்களையும் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்பினை வழங்கியுள்ளது. அமைச்சின் இதரத் துறைகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்வதற்குகான சந்தர்ப்பத்தையும் கொடுத்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரியல் துறையை மேம்படுத்துவதற்கான சிறந்த தளமாக இந்த பொறுப்பினை நான் பார்க்கிறேன் என்று பெர்னாமா செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் ரமணன் கூறினார்.

இந்த பணி இலக்கை மேம்படுத்தும் விதமாகக் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகளை தாம் மறு சீரமைப்புச் செய்யவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

# அவதூறு அரசியல் – ஜனநாயகம் அல்ல

**கோலாலம்பூர்-**

இஸ்லாம் கருணை மிக்கது மற்றும் அவதூறுகளை நிராகரிப்பதால், அவதூறு செய்வதை அன்றாடச் செயலாக கொண்டுள்ள நபர்கள், தங்களையும் சிதைத்து, சமூகத்தின் சிந்தனையைச் சேதப்படுத்துவதை, கைவிடுமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள்.

நிதியமைச்சர் முஹம்மது கமில் அப்துல் முனிமின் அரசியல் செயலாளர், ரம்ஜான் மற்றும் சியாவல் மாதங்கள் தொண்டு மற்றும் சிறந்த அணுகுமுறையால் நிரப்பப்பட வேண்டும் என்றார்.

மறுபுறம், நாட்டின் நன்மதிப்பை, உன்னத நிலைக்கு கொண்டு செல்வதில் உறுதியாக இருக்கும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மீது முடிவில்லாத வெறுப்பு கொண்ட சில நாயகர்கள் அவதூறான அரசியல் களியாட்டங்கள் நடத்தி, புனித ரம்ஜான் மாதத்தை கலங்கப்படுத்துகின்றனர் என்றார்.



"பொதுமக்களின் மனதை இட்டுக்கட்டப்பட்ட கதைகளாலும், ஜோடிக்கப்பட்ட சம்பவங்களை கொண்டு திரித்துவரும் அவர்கள். மக்களின் சாதுரியத்தை குறைத்து எடை போட்டு வருவது அவர்களின் அவசரத்தையும் , அறிவீனத்தை காட்டுகிறது. மேலும் இது பிரதமர் மற்றும் மடாணி அரசாங்க நிர்வாகத்தின் மீது கலங்கத்தை கற்பிக்கவும் முயற்சிப்பது தெளிவாக தெரிகிறது.

" உண்மையாக அரசியல், சமய ஆளுமை கொண்டவர்கள் இதுபோன்ற அசிங்கமான நடைமுறைகளுடன் தொடர்போ அல்லது ஈடுபடவோ மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களின் சுய அறிவின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும், அது வயதுக்கு ஏற்ப வளர்ச்சிக் காண வேண்டும். ஆனால் குப்பை கம்பளிப்பூச்சிகளைப் போல கேலி செய்வது எளிது, "என்று அவர் தனது முகநூல் பக்கத்தில் இன்று பதிவிட்டுள்ளார்.

பிரதமரின் உடல்நிலை குறித்து, அன்வாருக்கு நெருக்கமான நபர்களில் ஒருவரான முஹம்மது கமில், பிஸியான கால அட்டவணையால் பிரதமர் பணி அழுத்தப் பட்டாலும் நாட்டின் தலைவர் நன்றாக இருக்கிறார் என்று கூறினார்.

அவரைப் பொறுத்தவரை, அன்வர் போன்ற 76 வயது நபருக்கு, சில சமயங்களில் லேசான காய்ச்சல் அல்லது ஒவ்வாமை ஏற்படுவது இயல்பானது.

"இருப்பினும், அவரது விடாமுயற்சி, உற்சாகம், சாமர்த்தியம் மற்றும் வேலை செய்வதற்கான ஆற்றல், புத்திசாலித்தனம் ஆகியவற்றை கொண்டு தொடர்ந்து தனது சேவையை மேம்படுத்தி வருகிறார். அவர் வயதில் உள்ளவர்கள், அவரது வேலையின் வேகத்தை எட்டுவதற்கு சிரமப்படுகிறார்கள். அவரை விட மிகவும் இளையோர்களும் கூட சில நேரங்களில் பிரதமரின் தனியாற்றலுடன் ஒப்பீட்டளவில் பின் தங்குகிறார்கள்.

"நாட்டை மாற்றுவதற்கான தனது உறுதியிலிருந்து அவர் அசையவில்லை, அந்த மாற்றம் நேரம் எடுத்தாலும், விமர்சனங்களைப் பெற்றாலும், அவை புறந்தள்ள வேண்டிய சாடலாகும்," என்று அவர் கூறினார்.

நேர்மையான விமர்சகர்களுக்கு முடிந்தவரை இடம் கொடுக்க, அவதூறு செய்பவர்களுக்கு எதிராக ராயல் மலேசியன் காவல்துறையை (PDRM) செயல்பட முஹம்மது கமில் வலியுறுத்தினார், ஏனெனில் ஜனநாயக உரிமைகளில் அவதூறு மற்றும் பொறியியல் நடைமுறைகள் இல்லை.

# நிதியமைச்சை ஏமாற்றியதாக

## ஸ்பென்கோ நிறுவனத் தலைவர் மீது குற்றச்சாட்டு

**கோலாலம்பூர்-**

அரசாங்க வாகனங்களைப் பராமரிக்கும் 390 கோடி வெள்ளி மதிப்புள்ள குத்தகையை தனது நிறுவனம் பெறுவதற்காக நிதியமைச்சை ஏமாற்றியதாக ஸ்பென்கோ சென். பெர்ஹாட் நிறுவனத்தின் தலைவர் டான்ஸ்ரீ ரோபர்ட் டான் ஹூவா சூன் மீது இங்குள்ள செஷன்ஸ் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

நீதிபதி சுஸானா ஹூசேன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது 83 வயதான டான் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்து விசாரணை கோரினார். நான் குற்றச்சாட்டை புரிந்து கொண்டேன். நான் குற்றச்சாட்டை மறுக்கிறேன் என்று அவர் சொன்னார்.

இணைப்பு IV (இணைப்பு i) ஏலதாரர் சுயவிபரம் என்ற தலைப்பிலான ஆவணத்தின் மூலம் ஸ்பான்கோவில் 30 விழுக்காட்டு பூமிபுத்ரா பங்குரிமை தொடர்பானது. இதன் வழி 396 கோடியே 53 லட்சத்து 86 ஆயிரத்து 628 வெள்ளி மதிப்பிலான அரசாங்க வாகன விநியோகம், பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் நிர்வாக குத்தகையைப் பெறுவதற்கு நிதியமைச்சிடம் நேர்மையற்ற முறையில் ஆதிக்கம் செலுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



# எஸ்.சிவசங்கரி வெற்றி வாகை சூடினார்

**கோலாலம்பூர்ரி-**

தேசிய ஸ்குவாஷ் ராணி எஸ். சிவசங்கரி, லண்டன் ஸ்குவாஷ் கிளாசிக்கின் வெற்றியாளராக வாகை சூடி, நாட்டிற்குப் பெருமை சேர்த்தார்.

மலேசியாவின் விளையாட்டு வீரங்கனையான நிக்கல் டேவிட் ஸ்குவாஷில் விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சிவசங்கரி, நேற்று திங்கட்கிழமை உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான எகிப்தின் ஹனியா எல் ஹம்மாமியை இறுதி ஆட்டத்தில் வீழ்த்தி வரலாறு படைத்து, பெரும்பாலான மலேசியர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய வெற்றிதிருமகளானார்.

கெடா சுங்கை பட்டாணியில் வள்ளி நாகப்பன் – சுப்ரமணியம் கண்ணியப்பன் தம்பதிகளின் மகளான அவர் 2022ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டியில் நாட்டை பிரதிநிதித்து பிரதான விளையாட்டாளராகக் களம் இறங்கும் முன் கடும் சாலை விபத்தில் சிக்கி மீண்டு எழுந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தரவரிசையில் 13 வது இடத்தில் இருந்த சிவசங்கரி, முதல் செட்டில் 11-9 என புள்ளிகள் பெற்றார். அதனை தொடர்ந்து, எல் ஹம்மாமி இரண்டாவது செட்டில் 11-5 என்ற கணக்கில் முன் நோக்கி செல்ல தொடங்கினார்.

இருப்பினும், மூன்றாவது செட்டில், ஆட்டத்தின் கட்டுப்பாடு சிவசங்கரிக்குச் சாதகமாக மாறியது. அவர் 13-11 எனும் கணக்கில் மூன்றாவது செட்டில் முன் நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் 14-12 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்.

"இதைச் சுருக்கமாகச் சொல்ல எந்த வார்த்தையும் இல்லை, ஆனால் இந்த வாரம், முதல் தரவரிசையில் உள்ள 10 வீரர்களை மூன்று முறை தோற்கடித்ததன் மூலம் நான் எவ்வாறு என்னைக் கையாண்டேன் என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என சிவசங்கரி தெரிவித்தார்.

இந்த வெற்றியின் மூலம் சிவசங்கரி 17,598 அமெரிக்க டாலர்கள் (RM83,141) ரொக்கப் பரிசை வீட்டிற்கு எடுத்துச் செல்வார்.

# தேசிய ஸ்குவாஷ் வீராங்கனை சிவசங்கரிக்குப் பிரதமர் வாழ்த்து

**கோலாலம்பூர்-**

உலகின் 2ம் நிலை வீராங்கனையான எகிப்தின் ஹனியா எல் ஹம்மாமியை வீழ்த்தி லண்டன் கிளாசிக் பட்டத்தை வென்ற எஸ். சிவசங்கரிக்கு பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராகிம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஃபேஸ்புக்கில் ஒரு பதிவில், பிரதமர் அன்வார் "மலேசியாவை பிரதிநிதித்து 2015ல் இறுதியாக டத்தோ நிக்கோல் டேவிட் அடைந்த சாதனையை மீண்டும் ஏற்படுத்தியதற்கு தனது பாராட்டை தெரிவித்துக் கொண்டதுடன், சிவசங்கரி தொடர்ந்து முன்னேற வேண்டும் ,"மீண்டும் ஒருமுறை, வாழ்த்துக்கள், மேலும் இந்த வெற்றி எதிர்காலத்தில் மேலும் வெற்றியை ஊக்குவிக்கட்டும்" என்று பிரதமர் எழுதியிருந்தார்.

பிரசித்தி பெற்ற தொழில்முறை ஸ்குவாஷ் அசோசியேஷன் (பிஎஸ்ஏ) உலக சுற்றுப்பயணத்தில் சாம்பியன் ஷிப்பின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் மலேசிய வீராங்கனை என்ற பெருமையை அடைந்த அவர் லண்டன் கிளாசிக் அரையிறுதிக்கு ஏழு முறை உலக சாம்பியனான எகிப்து நாட்டின் நூரை கால் இறுதி போட்டியில் சிவசங்கரி திணறடித்தார் என்பதும் அனைவரும் அறிந்ததே !

தொடர்ந்து அரையிறுதியில் பெல்ஜியத்தின் 4-ம் நிலை வீராங்கனையான நெலே கிலிஸையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

நேற்று, சிவசங்கரி 108,500 அமெரிக்க டாலர்கள் லண்டன் கிளாசிக்கில் தனது முதல் தங்க-நிலை பிஎஸ்ஏ டூர் பட்டத்தை பெற்ற போது ஸ்குவாஷ் உலகிற்கு வந்ததை அதிகாரப்பூர்வமாக அறிவித்து விட்டார் என ஸ்குவாஷ் விளையாட்டு உலகம் கருதுகிறது .

81 நிமிடங்கள் நீடித்த பரபரப்பான இறுதிப் போட்டியில் உலகின் 13-ம் நிலை வீராங்கனையான சிவசங்கரி 11-9, 5-11, 13-11, 12-14, 11-8 என்ற செட் கணக்கில் தனது உயர்நிலைப் பள்ளி வீராங்கனையான ஹனியா எல் ஹம்மாமியை வீழ்த்தினார்.



# தோமஸ் கோப்பை அரையிறுதி ஆட்டத்தில் நுழைய – ஜப்பானை வீழ்த்தியது மலேசியா

**செங்டு-**

சீனாவில் உள்ள செங்டு உயர் தொழில்நுட்ப மண்டல விளையாட்டு மையத்தில் நடந்த 2024 தோமஸ் கோப்பையின் கால் இறுதி ஆட்டத்தில் ஜப்பானை 3-1 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்திய மலேசியா எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அரையிறுதி ஆட்டத்திற்குள் நுழைந்தது.

உலகின் 16வது நிலை ஜோடியான அகிரா கோகா-தைச்சி சைட்டோ ஜோடியை 66 நிமிடங்களில் 18-21, 21-15, 21-12 என்ற செட் கணக்கில் வீழ்த்தி, நாட்டின் இண்டாவது ஜோடியான கோ சே வெய்-நூர் இஸ்சுடின் தேசிய அணியினர் மலேசியாவின் நம்பிக்கை நாயகர்களாக உருவெடுத்தனர்.

உலகத் தரவரிசையில் 15வது இடத்தில் உள்ள இந்த ஜோடி, அரையிறுதிக்கு முன்னேறி வெற்றிப் புள்ளியை நாட்டிற்குத் தேடி தந்தனர். இது 32 ஆண்டுகால வறட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் நாட்டின் நம்பிக்கை புதுப்பித்தது.

கோகா-சைட்டோ உடனான தொடக்க ஆட்டத்தில் 18-21 என்ற கணக்கில் தோல்வி அடைந்த பின்னர், கோ சே வெய்-நூர் இஸ்சுடின், ஜோடி ஓர் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்த இரண்டு செட்களில் 21-15 மற்றும் 21-12 என்ற புள்ளிகளைப் பெற்று வெற்றி அடைந்தது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான இந்தியாவை சீன அணி 3-1 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தியதை அடுத்து, சனிக்கிழமை (மே 4) நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சீனாவை எதிர்கொண்டு தோல்வியடைந்தது.




# கோலாலம்பூருக்கு விமானச் சேவையைப் பிரிட்டிஷ் ஏர்வேஸ் மீண்டும் தொடங்குகிறது

**கோலாலம்பூர்-**

பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனம் கோலாலம்பூருடனான தனது பயண இணைப்பை எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் தொடங்கவுள்ளது. இது நோய்த் தொற்றுப் பரவலுக்குப் பின் ஆசியாவுக்கான பயண ஒருங்கமைப்பை விரிவுபடுத்தும் அந்த விமான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மேலும் நிரூபிக்கிறது.

மலேசிய தலைநகர் மற்றும் லண்டன் ஹீத்ரோ இடையே போயிங் பி 787-9 விமானம் தினசரி சேவையை வழங்கும் என்று அவ்விமான நிறுவனம் அறிக்கை தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 700 கோடி பிரிட்டிஷ் பவுண் (4,200 கோடி வெள்ளி ) மதிப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் உருமாற்றம் மற்றும் பல்வேறு நவீனமயமாக்கல் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த சேவை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது என அது கூறியது.

இதற்கிடையில், பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் கடைசியாகக் கடந்த 2020 இல் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்தின் முதலாவது முனையத்திற்கு வந்ததாக மலேசியா ஏர்போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் கணக்கில் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த அறிவிப்பு பற்றி கருத்துரைத்த மலேசியாவுக்கான பிரிட்டிஷ் தூதர் ஜல்சா டெர்ரி, லண்டனுக்கும் கோலாலம்பூருக்கும் இடையில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் நேரடி விமானச் சேவையை மீண்டும் தொடங்குவது இங்கிலாந்து மற்றும் மலேசியா இடையே வளர்ந்து வரும் நட்புறவைப் பிரதிபலிக்கிறது என்றார்.

இது எங்கள் இருதரப்பு வர்த்தகத்தில் சுமார் 600 கோடி பிரிட்டிஷ் பவுண் (3,600 கோடி வெள்ளி) உள்ளடக்கியிருக்கும். இவ்வாண்டின் பிற்பகுதியில் டிரான்ஸ்-பசிபிக் பங்காளித்துவத்திற்கான விரிவான மற்றும் முற்போக்கு ஒப்பந்தத்தின் ஒப்புதலை நிறைவு செய்யும் போது அபரிமிதமான வளர்ச்சி மேலும் சாத்தியமாகும் என்று அவர் பெர்னாமாவுக்கு அளித்தப் பேட்டியில் குறிப்பிட்டார்.

# அரசு ஊழியர்களுக்கு 13% சம்பள உயர்வு – டிசம்பரில் அமல்

**புத்ராஜெயா-**

அரசு ஊழியர்களுக்கு நாட்டின் வரலாற்றில் மிக உயர்ந்த மற்றும் சிறந்த சம்பள உயர்வை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இன்று அறிவித்தார். இந்த 13 விழுக்காட்டுச் சம்பள உயர்வு வரும் டிசம்பர் மாதம் அமலுக்கு வருகிறது.

இந்த சம்பள உயர்வு 1,000 கோடி வெள்ளிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டை உள்ளடக்கியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சம்பள உயர்வு 13 சதவீதத்தை விட அதிகமாகும். மடாணி அரசாங்கத்தின் வரலாற்றில் இது மிகச் சிறந்த அதிகரிப்பாகும் என இன்று தேசிய நிலையிலான தொழிலாளர் தினத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார்.

அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச வருமானம் மாதத்திற்கு 2,000 வெள்ளிக்கும் அதிகமாக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் பொதுச் சேவைத் துறை சம்பள முறையை (எஸ்.எஸ்.பி.ஏ.) அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது, சம்பளம் மற்றும் நிலையான அலவன்ஸை உள்ளடக்கிய அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச வருமானம் மாதம் 1,795 வெள்ளியாகும் எனவும் என்று பிரதமர் கூறினார்.

# அரசு ஊழியர்களுக்கு ஒற்றுமை அரசு மதிப்பளிக்கிறது

**ஷா ஆலம்-**

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்த சம்பள உயர்வு அரசாங்க ஊழியர்களுக்கு ஒற்றுமை அரசு உரிய மதிப்பினை அளிப்பதைக் காட்டுகிறது.

மேலும், கடுமையாக உழைப்பதற்குரிய உத்வேகத்தை இந்த சம்பள உயர்வு அரசு ஊழியர்களுக்கு ஏற்படுத்தும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பதிமூன்று விழுக்காட்டிற்கும் அதிகமான இந்த சம்பள உயர்வு வரும் டிசம்பர் மாதம் முதல் அமலுக்கு வருகிறது. நாட்டின் வரலாற்றில் அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட அதிகப்பட்ச சம்பள உயர்வாக இது விளங்குகிறது.

அரசு ஊழியர்களின் சேவை மற்றும் அர்ப்பண உணர்வை ஒற்றுமை அரசு போற்றுவதை இந்த சம்பள உயர்வு புலப்படுத்துவதாகக் கூறிய அமிருடின், உற்பத்தியையும் சேவைத் திறனையும் அதிகரிப்பதற்குரிய தூண்டுகோலாக இந்த சம்பள உயர்வு அமையும் என நம்பிக்கைத் தெரிவித்தார்.

இதனிடையே, அனுசரிக்கப்படும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சிலாங்கூரிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அமிருடின் தனது தொழிலாளர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.




# மலேசியாவில் மைக்ரோ சோப்ட் நிறுவனம்

## வெ.1,050 கோடி வெள்ளி முதலீடு

**கோலாலம்பூர்-**

மலேசியாவில் அடுத்த நான்காண்டுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) துறைகளில் 220 கோடி டாலரை (1,050 கோடி வெள்ளி) மைக்ரோசோப்ட் நிறுவனம் முதலீடு செய்யவிருக்கிறது.

இலக்கவியல் கட்டமைப்பை உருவாக்குவது, ஏ.ஐ. திறன் வாய்ப்புகளை உருவாக்குவது, தேசிய ஏ.ஐ. அடைவு நிலை மையத்தை அமைப்பது, நாட்டின் இணைய பாதுகாப்பு ஆற்றலை மேம்படுத்துவது ஆகிய நோக்கங்களுக்காக இந்த முதலீடு செய்யப்படுவதாக மைக்ரோ சோப்ட் நிறுவனத்தின் தலைவரும் தலைமைச் செயல்முறை அதிகாரியுமான சத்யா நடேல்லா கூறினார்.

ஏ.ஐ. உள்பட க்ளாவ்ட் கணினி மற்றும் மேம்பாடைந்த தொழில்நுட்ப மையமாக மலேசியாவை உருவாக்கும் மைக்ரோசோப்ட் நிறுவனத்தின் கடப்பாட்டின் அடிப்படையில் இந்த முதலீடு செய்யப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அனைத்து ஸ்தாபனங்கள், மென்பொருள் உற்பத்தியாளர்கள், தொடக்க நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்நாட்டில் உலகத் தரத்திலான அடிப்படை வசதிகளை நாங்கள் கொண்டிருப்பதை உறுதி செய்ய விரும்புகிறோம். இதன் வழி இந்நாட்டின் மற்றும் இந்த பிராந்தியத்தின் உருவாக்கத்திற்கும் பங்களிக்க முடியும் என்று அவர் சொன்னார்.

இங்கு நடைபெற்ற மைக்ரோசோப்ட் பில்ட் ஏ.ஐ. டே எனும் நிகழ்வில் முக்கிய உரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனிடையே, தனது பேஸ்புக் பக்கத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மைக்ரோ சோப்ட் நிறுவனம் மலேசியாவில் தடம் பதித்த 32 ஆண்டுகளில் அதிக முதலீடுகளைச் செய்வது இதுவே முதன் முறையாகும் எனக் குறிப்பிட்டார்.




# மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் பல்வேறு திட்டங்கள்

**உலு சிலாங்கூர்-**

ஒற்றுமை அரசின் நோக்கத்திற்கு ஏற்ப சிலாங்கூரில் பரம ஏழ்மையை ஒழிப்பதற்கு மாநில அரசு உறுதிபூண்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டம் (பிங்காஸ்) உள்பட பல்வேறு திட்டங்களை மாநில அரசு அமல்படுத்தியுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நாட்டில் பரம ஏழ்மையை முற்றிலும் ஒழிக்கப் போவதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் சூளுரைத்துள்ளார். பரம ஏழ்மையை முற்றிலும் ஒழிக்காவிட்டாலும் சுமார் 88 விழுக்காடு ஒழிப்பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம்.

சிலதரப்பினர் இந்த நடவடிக்கையை கேலி செய்தாலும் இது சாத்தியமில்லை என்றாலும் பரம ஏழ்மையை ஒழிப்பதற்கான முயற்சியை நாம் தொடர்வோம் என்று அவர் சொன்னார்.

முன்னதாக அவர், இங்குள்ள உலுயாம் லாமா, தாமான் பத்து 30 குடியிருப்பு பகுதியில் தன் கணவரை இழந்த சபியா மாசான் வீட்டில் நடைபெற்ற யாசின் வாசிப்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ ஜம்ரி அப்துல் காடீர், லெம்பா ஜெயா சட்டமன்ற உறுப்பினர் சைட் அகமது அப்துல் ரஹ்மான் அல்ஹாடாட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிலாங்கூரில் வறுமை ஒழிப்பு திட்டங்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதோடு இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு சிறப்பான முறையில் மேற்கொள்ளும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த ஜனவரி மாதம் கூறியிருந்தார்.

நாட்டின் வருமானம் சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருவதன் அடிப்படையில் இந்த பரம ஏழ்மை பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என அவர் சொன்னார்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor